ஏழ்மையும், அறியாமையும் கனவுகளை அழித்துவிட அனுமதியோம்...

# UNIT - 6

# இந்தியப் பொருளாதாரம்

## TNPSC - GROUP I, II, II A




# திண்ணை

## பயிற்சிப் பட்டறை, தேனி

9940970325 Thinnai Theni Thinnai Competitive Exam thinnnaimail@gmail.com

ஏழ்மையும் அறியாமையும் கனவுகளை அழித்துவிடஅனுமதியோம்...

# திண்ணை

பயிற்சிப் பட்டறை, தேனி
வழங்கும்

# இந்தியப் பொருளாதாரம்




திண்ணை பயிற்சி பட்டறை, 57A, ஜவகர் மெயின்ரோடு, NRT நகர், தேனி

9940970325 Thinnai Competitive Exam YouTube Thinnai Theni thinnaimail@gmail.com

# திண்ணை உறுதிமொழி

இரக்கமும் கருணையும் இருகண்களாகட்டும்!

இதழ்கள் இரண்டிலும் புன்னகை மலரட்டும்!

உழைப்பும், உறுதியும் இருதோள்களாகட்டும்!

நேர்மை ஒன்றையே நெஞ்சம் தாங்கட்டும்!

இடதும் வலதும் இணைந்த கரங்களாகட்டும்!

இதயம் என்றும் அன்பால் துடிக்கட்டும்!

தடைகளைத் தாண்டி கால்கள் ஓடட்டும்!

கொட்டும் வியர்வையே மூலதனமாகட்டும்!

சாதி மதம் பேதம் ஒழிப்போம்!

பதவி பணம் தரும் கர்வம் தவிர்ப்போம்!

லட்சியம் விதைத்து வெற்றியை அடைந்து!

லஞ்சம் தவிர்த்து நெஞ்சை நிமிர்த்து!

அறத்தின் வழி நின்று மனிதம் போற்று!

| S.No | பொருளடக்கம் | Page No |
|---|---|---|
| 1 | இந்திய பொருளாதாரத்தின் இயல்புகள் | 2 |
| 2 | திட்டக்குழு மற்றும் நிதி ஆயோக், ஐந்தாண்டுத் திட்டங்கள் ஒரு மதிப்பீடு | 32 |
| 3 | இந்திய ரிசர்வ் வங்கி | 45 |
| 4 | நிதிக்கொள்கை மற்றும் பணக்கொள்கை | 63 |
| 5 | வருவாய் ஆதாரங்கள், நிதி ஆணையம், மத்திய மாநிலங்களுக்கிடையேயான நிதிப் பகிர்வு, சரக்கு மற்றும் சேவை வரி | 81 |
| 6 | இந்திய பொருளாதார அமைப்பு & வேலைவாய்ப்பு உருவாக்கம் | 89 |
| 7 | நிலசீர்த்திருத்தங்கள் மற்றும் வேளாண்மை, வேளாண்மையில் அறிவியல் தொழில்நுட்பத்தின் பயன்பாடு | 121 |
| 8 | தொழிலக வளர்ச்சி | 159 |
| 9 | ஊரக நலன்சார் திட்டங்கள் | 186 |
| 10 | சமூகப் பிரச்சினைகள் - மக்கள் தொகை, கல்வி, சுகாதாரம், வேலைவாய்ப்பு, வறுமை | 201 |

அலகு 2

# திட்டக்குழு மற்றும் நிதி ஆயோக், ஐந்தாண்டுத் திட்டங்கள் ஒரு மதிப்பீடு

## திட்டக்குழு மற்றும் நிதி ஆயோக்

**திட்டமிடல்**

**திட்டமிடலின் பொருள்**

- மைய திட்டமிடல் ஆணையத்தால் நன்கு வடிவமைக்கப்பட்ட, முன் கூட்டியே நிர்ணயிக்கப்பட்ட குறிக்கோள்களையும், நோக்கங்களையும் அடைவதற்கான வழிமுறையே திட்டமிடல் ஆகும்.

**திட்டமிடலின் இலக்கணங்கள்**

- பொருளாதாரத் திட்டமிடல் என்பது தனியார் உற்பத்தி மற்றும் விநியோக நடவடிக்கைகளை கூட்டாக கட்டுப்படுத்துவது அல்லது ஒடுக்குவதை குறிப்பதாகும்.
- பொருளாதாரத் திட்டமிடல் என்பது தேர்ந்தெடுக்கப்பட்ட இலக்குகளை அடைய உரிய பொறுப்பில் உள்ளவர்கள் நிதானமாக சிந்தித்து, இருக்கக்கூடிய பொருளாதார வளங்களை அதிக அளவில் பயன்படுத்த சுட்டிக்காட்டும் வழிமுறைகளே ஆகும்.

**இந்தியாவில் பொருளாதாரத் திட்டமிடல்**

- சோவியத் ஒன்றியம் திட்டமிடலை 1928-ல் செயல்படுத்தத் துவங்கியது. பொருளாதாரத் திட்டமிடலே சோவியத் நாட்டை வல்லவரசு நாடாக மாற்ற உதவியது.
- இந்திய விடுதலைக்குப்பிறகு 1948-ல் தொழில் கொள்கை அறிவிக்கப்பட்டது. இதில் மையத் திட்டக்குழு மற்றும் கலப்புப் பொருளாதார அமைப்பு முறை ஆகிய இரண்டையும் அமைக்க பரிந்துரைக்கப்பட்டிருந்தது.
- இந்திய அரசியலமைப்பு சட்டம் ஜனவரி 26,1950 அன்று நாடாளுமன்றத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. திட்டக்குழு மார்ச் 15,1950ல் அமைக்கப்பட்டது. ஏப்ரல் 1,1951ல் முதல் திட்ட காலம் துவங்கியது. இதில் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் காலமாக 1951 முதல் 1956 வரை ஏற்படுத்தப்பட்டது.

### பரிணாம வளர்ச்சி

**1. உயர்திரு.எம்.விஸ்வேஸ்வரய்யா(1934)**

- புகழ்பெற்ற பொறியியல் வல்லுநரும் அரசியல்வாதியுமான எம்.விஸ்வேஸ்வரய்யா 1934ல் இந்தியாவில் திட்டமிடுதலுக்கான அடித்தளத்தை அமைத்தார். அவர் தனது ஆலோசனையாக பத்தாண்டுத்

திட்டமொன்றை அவர் எழுதிய இந்திய பொருளாதார திட்டமிடல் என்ற புத்தகத்தில் விளக்கியுள்ளார்.

2. **ஜவஹர்லால் நேரு(1938)**
   - ஜவஹர்லால் நேரு திட்டக்குழு ஒன்றை அமைத்தார். அன்றைய அரசியல் சூழ்நிலை காரணமாகவும், இரண்டாம் உலகப்போர் ஆரம்பித்ததாலும் நேருவின் முயற்சிகள் நின்றுவிட்டன.

3. **பாம்பே திட்டம்(1940)**
   - மும்பையின் முன்னணி 8 தொழிலதிபர்கள் பாம்பே திட்டம் என்ற திட்டத்தை 1938-ல் முன்மொழிந்தனர். இது பதினைந்து ஆண்டுகளுக்கான தொழில் முதலீட்டுத் திட்டமாகும்.

4. **எஸ்.என்.அகர்வால்(1944)**
   - எஸ்.என் அகர்வால் என்பவர் காந்தியத் திட்டம் என்ற திட்டத்தை 1944-ல் வழங்கினார். இது வேளாண்மை மற்றும் கிராமியப் பொருளாதார முன்னேற்றத்திற்கான திட்டமாகும்.

5. **எம்.என்.ராய்(1945)**
   - மக்கள் திட்டம் என்பதை வடிவமைத்தார். இது வேளாண்மை உற்பத்தி மற்றும் விநியோகத்தை இயந்திர மயமாக்குவதையும் நுகர்வுப் பொருட்களை அரசே விநியோகம் செய்யவேண்டும் என்பதையும் வலியுறுத்தியது.

6. **ஜெயப்பிரகாஷ் நாராயணன்(1950)**
   - சர்வோதயத் திட்டம் ஒன்றை முன்மொழிந்தார். இது காந்தி மற்றும் வினோபா பாவே ஆகியோரின் கருத்துக்களின் உத்வேகத்தால் தயாரிக்கப்பட்டத் திட்டமாகும். விவசாயம் மட்டுமல்லாமல் சிறு மற்றும் குடிசைத் தொழில்களுக்கு ஊக்கமளிக்கும் கூறுகளைக் கொண்டத் திட்டமாகும்.
   - இந்த ஆறுத் திட்டங்களையும் கவனமாக ஆராய்ந்து திட்டக்குழுவை அமைத்து ஐந்தாண்டுத் திட்டங்களாக செயல்படுத்த ஜவஹர்லால் நேரு முடிவெடுத்தார். அவரே இந்திய அரசின் திட்டக் குழுவின் முதல் தலைவராவார்.

## இந்திய திட்டமிடுதல் முறைகள்

1. **ஹெராட் டோமர் மாதிரி**
   - முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்போது இம்முறை பின்பற்றப்பட்டது.
   - மூலதன குவிப்பை இரு நோக்கங்களுக்காகப் பயன்படுத்திட அறிவுறுத்தியது
   - ஒரு புறம் தேசிய வருவாயை உயர்த்தியும் மறுபுறம் உற்பத்தியைப் பெருக்கியும் நாட்டை முன்னேற்றப்பாதையில் கொண்டு செல்ல அறிவுறுத்தியது.

### 2. நேரு - மஹலநோபிஸ் மாதிரி

- இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்போது இம்முறை பின்பற்றப்பட்டது.
- ரஷ்யாவை மாதிரியாகக் கொண்டு தொழில்வளர்ச்சி மூலம் முன்னேற்றமடையத் திட்டமிடல் என்பதே இதன் அடிப்படை
- இதில் நுகர்வோர் மற்றும் மூலதனத்துடன் அரசுப் பொதுத்துறை மூலம் நாட்டின் வளர்ச்சியை அடைதல் என்பது முக்கிய நோக்கமாகும்.
- கனரகத் தொழில்கள் மூலம் வேகமான தொழில் வளர்ச்சி என்பது இம்முறையாகும்.

### 3. காந்திய மாதிரி

- கடையனுக்கு கடைத்தேற்றம் என்பதே நோக்கம்
- 1944 ல் எஸ்.என்.அகர்வால் என்பவரால் வெளியிடப்பட்டது.
- ஜனதா ஆட்சியின்போது சுழல் திட்ட காலத்தில் பயன்படுத்தப்பட்டது.
- வேளாண்மை கிராமத்தொழில்கள் கைவினைத் தொழில்கள், சிறுதொழில்கள் மேம்பாட்டிற்கு முக்கியத்துவம் அளிக்கிறது.
- கலாச்சாரத்துடன் இணைந்த அடிப்படை வாழ்க்கைத் தர மேம்பாட்டு நோக்கம் கொண்டது.

### LPG

- ராவ் - மன்மோகன் மாதிரி எனவும் அழைக்கப்படுகிறது
- எட்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் செயல்படுத்தப்பட்டது.
- பொதுத்துறைக்கு என ஒதுக்கப்பட்ட பல்வேறு துறைகளில் தனியாருக்கும் அனுமதி வழங்கல், கட்டாய உரிமம், கெடுபிடிகளைக் குறைத்தல் போன்றவற்றை உள்ளடக்கியது.
- அந்நிய முதலீடுகளைப் பல்வேறு துறைகளில் ஈர்த்தல், இறக்குமதிக் கட்டுப்பாடுகளைத் தளர்த்தல் போன்ற சந்தைப் பொருளாதார நடவடிக்கைகளுக்கு அனுமதி.
- தாராளமயமாக்கல், தனியார் மயமாக்கல், உலக மயமாக்கல் என்பவை இம்மாதிரியின் முக்கிய அம்சங்கள்.

### PURA மாதிரி

- Providing Urban Amentities in Rural Areas, (PURA).
- கிராமப்புறங்களிலும் அனைத்து நகர்புற வசதிகள் கிடைக்கப் பெற வேண்டும் என்ற அப்துல்காலம் அவர்களின் யோசனையே இம்மாதிரி ஆகும்.
- கிராமப்புறங்களிலும் பொருள் சார்ந்த, மின்னணு சார்ந்த அறிவு சார்ந்த மற்றும் பொருளாதாரம் சார்ந்த அனைத்தும் கிடைக்கப் பெறல் வேண்டும் என்பதாகும்.
- இது பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் செயல்படுத்திப் பார்க்கப்பட்டது.

**திட்டக்குழு உருவாக்கம்**

- 1950ல் தேசிய திட்டக்குழு ஜவஹர்லால் நேரு தலைமையில் உருவாக்கப்பட்டது. இது மத்திய கேபினட் சபையின் தீர்மானம் மூலம் உருவாக்கப்பட்டது. இதன் முக்கிய பணி “நாட்டு வளங்களை சீரிய மற்றும் பயனுள்ள வகையிலும் மற்றும் சமமாகப் பயன்படுத்தவும் திட்டங்களைத் தீட்டுதல்” ஆகும்.
- இத்திட்டக்குழுவே ஐந்தாண்டுத்திட்டங்களை வகுக்கிறது. தற்போது நாம் பன்னிரெண்டு ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவு செய்துள்ளோம்.

**தேசிய மேம்பாட்டுக் குழு**

- 1952 ஆகஸ்டு 6ல் உருவாக்கப்பட்டது
- தலைவர் - பிரதமர்
- மற்ற உறுப்பினர்கள் மத்திய கேபினட் மந்திரிகள், முதல்வர்கள் அனைத்து மாநில நிதி மந்திரிகள், யூனியன் பிரதேச துணை நிலை ஆளுநர்கள் மற்றும் மத்திய அரசால் ஆளப்படும் மாநிலங்களின் ஆளுநர்கள்.
- திட்டக்குழுவினால் உருவாக்கப்படும் அனைத்துத் திட்டங்களும் தேசிய மேம்பாட்டுக் குழுவினால் முதலில் அங்கீகரிக்கப்படும்.
- மத்திய மற்றும் மாநில அரசுகள் மற்றும் திட்டக்குழு ஆகியவற்றுக்கு இடையே பொருளாதார திட்டமிடுதலின் ஒத்துழைப்பைப் பெருக்க உருவாக்கப்பட்டது.
- இது அரசியலமைப்பிற்கு உட்பட்டதும் இல்லை மற்றும் சட்டபூர்வமான அமைப்பும் இல்லை(ஆலோசனை மட்டும் வழங்கும்)

**திட்டமிடலின் வகைகள்**

1. மக்களாட்சி மற்றும் சர்வாதிகாரம்
2. மையப்படுத்தப்பட்ட மற்றும் பரவலாக்கப்பட்ட
3. வழிகாட்டுதல்படி திட்டமிடல் மற்றும் தூண்டும் திட்டமிடல்
4. சுட்டிக் காட்டும் மற்றும் கட்டாய திட்டமிடல்
5. குறுகிய நடுத்தர மற்றும் நீண்ட கால திட்டமிடல்
6. நிதித்திட்டமிடல் மற்றும் நாணய திட்டமிடல்
7. செயல்பாட்டு மற்றும் கட்டமைப்பு திட்டமிடல்
8. பொது மற்றும் பகுதித்திட்டமிடல்

**1. மக்களாட்சி மற்றும் சர்வாதிகாரத் திட்டமிடல்**

- திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் செயல்படுத்துதலில் உள்ள அனைத்து நிலைகளிலும் மக்கள் பங்கெடுத்துக் கொள்ளும் திட்டமிடலே மக்களாட்சித் திட்டமிடல்.
- அரசு, தனியார் மற்றும் பொது மக்களை உள்ளடக்கிய மிகப்பரவலான ஆலோசனைகளை பெற்றுத் தயாரிக்கப்பட்டு, அவர்களாலேயே செயல்படுத்தப்படும் திட்டமிடல் முறையாகும்.

- சர்வாதிகார திட்டமிடலில் பொருளாதார நடவடிக்கைகள் மத்திய கட்டுப்பாடு மற்றும் வழிகாட்டுதலின் படி ஒரே ஒரு திட்டமாக இருக்கும். நுகர்வு, பரிவர்த்தனை மற்றும் விநியோகம் ஆகிய அனைத்துமே அரசு கட்டுபாட்டிலிருக்கும். திட்டக் குழுவே அதிகாரமிக்க அங்கமாகும்.

**2. மையப்படுத்தப்பட்ட திட்டமிடல் மற்றும் பரவலாக்கப்பட்ட**

- மையப்படுத்தப்பட்ட திட்டமிடலில், அனைத்து நிலைகளிலும் திட்டம் தொடர்புடைய நடவடிக்கைகள் மையத் திட்டக்குழுவின் கட்டுப்பாட்டில் இருக்கும்.
- திட்டக்குழுவே திட்டம் தீட்டுதல், நோக்கங்களை நிர்ணயித்தல், இலக்குகளைக் கண்டறிதல் மற்றும் தீர்மானித்தல் ஆகியவற்றை செய்கிறது. மேலிருந்து திட்டமிடல் என்றும் இதைக் கூறலாம்.

**3. வழிகாட்டுதல் திட்டமிடல் மற்றும் தூண்டும் திட்டமிடல்**

- திட்டக்குழு வழிகாட்டுதல் வழங்கி, திட்டம் தயாரித்து மேலும் திட்டத்தை ஆணையிடுதல் மூலம் செயல்படுத்தினால் அது வழிகாட்டுதல் திட்டமிடல் ஆகும்.

**4. சுட்டிக் காட்டும் திட்டமிடலும் மற்றும் கட்டாய திட்டமிடலும்**

- கலப்பினப் பொருளாதார நாடுகளுக்கு பொருத்தமான திட்டமிடல் முறையாக மோனட் திட்டம் என்ற பெயரில் பிரான்ஸ் நாடானது 1947 லிருந்து 1950 வரை செயல்படுத்தியது.
- திட்டக்குழு இலக்குகளை அடையும் வழிமுறைகளை குறிப்புரைகளாக தயாரித்தது, தனியார் நிறுவனங்களின் பிரதிநிதிகள் தொழிற்சங்கத் தலைவர்கள், நுகர்வோர் குழுக்கள் நிதி நிறுவனங்கள் மற்றும் பிற துறை நிபுணர்களிடம் கலந்து ஆலோசித்து செயல்படுத்தும் திட்டமிடலே சுட்டிக்காட்டும் திட்டமிடல் ஆகும்.
- சீனாவும், ரஷ்யாவும் இந்த திட்டமுறைகளை கடைபிடிக்கும் நாடுகளாகும்.

**5. குறுகிய கால, நடுத்தர கால மற்றும் நீண்ட காலத் திட்டமிடல்**

- ஓராண்டில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறுகிய கால திட்டங்களாகும். ‘‘கட்டுப்படுத்தும் திட்டம்’’, ‘‘ஆண்டுத் திட்டம்’’ எனவும் அறியப்படுகிறது.
- மூன்றிலிருந்து ஏழு ஆண்டு காலத்தில் முழுவடையும் திட்டங்களை நடுத்தரக் காலத்திட்டங்கள் ஆகும். பொதுவாக ஐந்தாண்டுத் திட்டங்களாகவே செயல்படுத்தப்படுகின்றன.
- பத்திலிருந்து முப்பது ஆண்டுகளுக்கு தீட்டப்படும் திட்டங்கள் நீண்டகாலத் திட்டமிடல், இவை முன்னோக்குத் திட்டங்கள் எனவும் அழைக்கப்படுகிறது.

**6. நிதித்திட்டமிடல் மற்றும் உருவப்பொருள் திட்டமிடல்**

- திட்டத்தை செயல்படுத்தத் தேவையான நிதியை பண மதிப்பு ஒதுக்கீடு செய்யும் திட்டமிடலே நிதித் திட்டமிடலாகும். உருவப்பொருள் திட்டமிடல் என்பது மனித வளம், இயற்கை வளம் மற்றும் இயந்திரங்கள் போன்ற பருமப் பொருட்களை ஒதுக்கீடு செய்யும் திட்டமிடல் முறையாகும்.

**7. பணிகள் திட்டமிடல் மற்றும் கட்டமைப்புத் திட்டமிடல்**

- ஒரு நாடு பெற்றுள்ள பொருளாதார மற்றும் சமூக அமைப்பு முறையை மாற்றாமல் பொருளாதார சீர்கேடுகளை நீக்கவதற்கு வழிகாட்டுதல்கள் மட்டுமே செய்யும் திட்டமிடல் பணிகள் திட்டமிடலாகும்.

**8. விரிவான மற்றும் பகுதித்திட்டமிடல்**

- நாட்டின் அனைத்துப் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான திட்டமிடல் விரிவான திட்டமிடலாகும். ஒரு சில துறைகளுக்கு மட்டுமே இலக்கு நிர்ணயம் செய்து அதை அடைய தீட்டப்படும் திட்டம் பகுதித் திட்டமாகும்.

**திட்டமிடல் மூன்று வகைப்படும்**

**1. நீண்ட காலம் 10 ஆண்டுகளுக்கு மேல்**

- நீண்ட காலம் 10 ஆண்டுகளுக்கு மேல் ஒரு காலப்பகுதியாகக் கருதப்படுகிறது - வியூகத்திட்டமிடல்

**2. நடுத்தர காலம் 3-7 ஆண்டுகள்**

- நடுத்தர கால திட்டமிடல் 5 ஆண்டுகளுக்கு மேல் ஒரு காலப்பகுதியாக கருதப்படுகிறது - தந்திரமான திட்டமிடல்

**3. குறுகிய காலம் 1-ஆண்டு வரை**

- குறுகிய கால திட்டமிடல் ஆண்டு வரை ஒரு காலப்பகுதியாக கருதப்படுகிறது - செயல்பாட்டு திட்டமிடல்.

## ஐந்தாண்டுத் திட்டங்கள் ஒரு மதிப்பீடு

**இந்திய ஐந்தாண்டுத் திட்டங்களின் சாதனைகள்**

- ஐந்தாண்டுத் திட்டங்கள் வாயிலாக பொருளாதாரத் திட்டமிடலை மேற்கொள்ளும் முறை ரஷ்யாவிடமிருந்து முன்னால் சோவியத் ரஷ்யா தருவிக்கப்பட்டது.
- இதுவரை இந்தியா 12 ஐந்தாண்டுத் திட்டங்களை செயல்படுத்தியுள்ளது.
- பன்னிரெண்டாம் ஐந்தாண்டுத் திட்டமே(2012-2017) இறுதியான ஐந்தாண்டுத் திட்டம் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்திய அரசு ஐந்தாண்டுத்திட்டங்களை

நிறுத்தி விட்டு அதற்கு பதிலாக நிதி ஆயோக்(National Institution for Transforming India) மூலம் திட்டமிட முடிவு செய்துள்ளது.

**முதல் ஐந்தாண்டுத் திட்டம்(1951-1956)**

- இது ஹொரேட் டாமர் (Harrod-Damar) மாதிரியை அடிப்படையாகக் கொண்டது.
- இதன் முதன்மை நோக்கம் நாட்டின் வேளாண்மை முன்னேற்றமாகும்.
- இத்திட்டம் 3.6% வளர்ச்சி வீதத்துடன் (இலக்கைவிட அதிகம்) வெற்றி பெற்றது.

**இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம்(1956-1961)**

- இது P.C.மஹலநோபிஸ் (P.C. Mahalanobis) மாதிரியை அடிப்படையாகக் கொண்டது.
- இதன் முதன்மை நோக்கம் நாட்டின் தொழில் முன்னேற்றத்தை மேம்படுத்துவதாகும்.
- இத்திட்டம் 4.1% வளர்ச்சியுடன் வெற்றி பெற்றது.

**மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம்(1961-1966)**

- இத்திட்டம் காட்கில் திட்டம் (Gadgil) என்றும் அழைக்கப்பட்டது.
- இத்திட்டத்தின் முதன்மை நோக்கம் சுதந்திரமான பொருளாதாரம் மற்றும் சுய முன்னேற்ற நிலையை ஏற்படுத்துதல் ஆகும்.
- சீன-இந்தியப் போரின் காரணமாக இலக்கு வளர்ச்சியான 5.6% அடைய இயலவில்லை.

**திட்ட விடுமுறை காலம்(1966-1969)**

- இந்தியா பாகிஸ்தான் போர் மற்றும் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் தோல்வியே இத்திட்ட விடுமுறைக்கான முதன்மைக் காரணமாகும்.
- இக்கால கட்டத்தில் ஓராண்டுத் திட்டங்கள் உருவாக்கப்பட்டு வேளாண்மை, வேளாண் சார் துறைகள் மற்றும் தொழில் துறைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.

**நான்காம் ஐந்தாண்டுத் திட்டம்(1969-1974)**

- இத்திட்டத்தின் இரண்டு முக்கிய நோக்கங்கள் நிலையான வளர்ச்சி மற்றும் தற்சார்பு நிலையை அடைதலாகும்.
- இத்திட்டம் அதன் இலக்கான 5.7% வளர்ச்சியை எட்டாமல் 3.3% வளர்ச்சியை மட்டுமே பெற்று தோல்வியடைந்தது.

**ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டம்(1974-1979)**

- இத்திட்டத்தில் வேளாண்மை தொழில் துறை மற்றும் சுரங்கத் தொழிலுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது.
- ஒட்டுமொத்தமாக நோக்குகையில் இலக்கு வளர்ச்சியான 4.4%ஐ விட 4.8% வளர்ச்சி பெற்று இத்திட்டம் வெற்றி பெற்றது.
- இத்திட்டத்திற்கான முன் வரைவு தார் அவர்களால் தயாரிக்கப்பட்டது. இத்திட்டம் 1978ஆம் ஆண்டு(ஓராண்டுக்கு முன்பே) கைவிடப்பட்டது.

**சுழல் திட்டம்**

- 1978-79 ஆம் ஆண்டு ஒரு வருட காலத்திற்காக இச்சுழல் திட்டம் தொடங்கப்பட்டது. இது ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் நீக்கிய பிறகு தொடங்கியது.

**ஆறாம் ஐந்தாண்டுத் திட்டம்(1980-1985)**

- இத்திட்டத்தின் அடிப்படை நோக்கம் வறுமை ஒழிப்பு மற்றும் தொழில்துறை சார்பு ஆகும். வறுமை ஒழிப்பு என்பதே இதன் இலட்சியமாகும்.
- இது முதலீட்டு திட்டத்தை அடிப்படையாக கொண்டது.
- இத்திட்டத்தின் வளர்ச்சி இலக்கு 5.2% ஆனால் 5.7% வளர்ச்சி எட்டப்பட்டது.

**ஏழாம் ஐந்தாண்டுத் திட்டம்(1985-1990)**

- இத்திட்டத்தின்நோக்கம் தன்னிறைவுப் பொருளாதாரத்தை உருவாக்குதல் மற்றும் ஆக்கப்பூர்வமான வேலைவாய்ப்பை வழங்குதல் ஆகியவற்றை உள்ளடக்கியது.
- முதன்முறையாக பொதுத்துறையாக்கம் மேலாக தனியார் துறைக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது. இது தனியார் துறையின் வெற்றியாக அமைந்தது.
- இத்திட்டதின் வளர்ச்சி இலக்கு 5.0% ஆனால் 6.0% வளர்ச்சி காணப்பட்டது.

**ஆண்டுத் திட்டங்கள்**

- மைய அரசில் நிலையற்ற அரசியல்சூழல் நிலவியதால் எட்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்த இயலவில்லை. எனவே 1991-92 ஆம்ஆண்டுகளுக்கு இரு ஓராண்டுத் திட்டங்கள் உருவாக்கப்பட்டன.

**எட்டாம் ஐந்தாண்டுத் திட்டம்(1992-1997)**

- இத்திட்டத்தில் வேலைவாய்ப்பு, கல்வி, சமூகநலம் போன்ற மனித வள மேம்பாட்டு நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டது.
- இத்திட்ட காலத்தில் இந்தியாவிற்கான புதிய பொருளாதாரக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டது.

- இத்திட்டத்தின் வளர்ச்சி இலக்கு 5.6% ஆனால் 6.8% வளர்ச்சி காணப்பட்டது.

**ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டம்(1997-2002)**

- சமூக நீதியுடன் கூடிய சமமான வளர்ச்சிக்கு இத்திட்டத்தில் முக்கிய கவனம் கொடுக்கப்பட்டது.
- இத்திட்ட கால இலக்கான 7% வளர்ச்சி எட்டப்படவில்லை. இந்தியப் பொருளாதாரம் 5.6% வளர்ச்சியை மட்டுமே அடைந்தது.

**பத்தாம் ஐந்தாண்டுத் திட்டம்(2002-2007)**

- இத்திட்டம் அடுத்த பத்தாண்டுகளில் தலா வருவாயை இரு மடங்காக உயர்த்த இலக்கு நிர்ணயித்தது.
- இத்திட்டம் 2012 ஆம் ஆண்டில் வறுமை விகிதத்தை 15% ஆகக் குறைக்கும் குறிக்கோளைக் கொண்டுள்ளது.
- இத்திட்டத்தின் வளர்ச்சி இலக்கு 8.0% ஆனால் எட்டப்பட்டது 7.2% மட்டுமே.
- பதினொன்றாம் ஐந்தாண்டுத்திட்டம்(2007-2012)
- இதன் முக்கிய நோக்கம் விரைவான மற்றும் அதிகமான உள்ளடக்கிய வளர்ச்சியாகும்.
- இதன் வளர்ச்சி இலக்கு 8.1% ஆனால் எட்டப்பட்டது 7.9% மட்டுமே.

**பன்னிரெண்டாம் ஐந்தாண்டுத் திட்டம்(2012-2017)**

- இதன் முதன்மை நோக்கம் விரைவான அதிகமான உள்ளடக்கிய மற்றும் நிலையான வளர்ச்சியே ஆகும்.
- இதன் வளர்ச்சி இலக்கு 8% ஆகும்.

## நிதி ஆயோக்

- நிதி ஆயோக் என்பது இந்திய அரசாங்கத்தின் கொள்கைகளின் யோசனைக் குழுவாகும்.
- திட்டக்குழுவிற்கு மாற்றாக ஆகஸ்ட் 13,2014 இல் நிதி ஆயோக் ஏற்படுத்தப்பட்டது.
- பிரதம மந்திரி நிதி ஆயோக்கின் தலைவர் மற்றும் மத்திய அமைச்சர்கள் அதன் உறுப்பினர்கள்.
- நிதி ஆயோக்கின் துணைத்தலைவர் அதன் செயல்தலைவராக உள்ளார் மற்றும் அதன் முதல் துணைத்தலைவர் அரவிந்த் பனகாரியா ஆவார்.
- National Institution for Tranforming India என்பதன் சுருக்கமே நிதி ஆயோக் என்பதாகும் இதன்படி ஜனவரி 1, 2015 அன்று அமைச்சரவைக் குழுவின் தீர்மானத்தின் மூலமாக நிதி ஆயோக் அமைக்கப்பட்டது.
- நிதி ஆயோக் என்பது இந்திய அரசின் திட்டங்களையும் கொள்கைகளையும் கண்காணிக்கும் அறிவு மையமாகும்.

## நிதி ஆயோக்கின் பணிகள்

1. **கூட்டுறவு மற்றும் போட்டி அடிப்படையிலான கூட்டாட்சி**
    - மாநிலங்கள் நாட்டின் கொள்கை வடிவமைப்பதில் துடிப்புடன் பங்கெடுக்கத் தேவையானவற்றை செய்வது

2. **நாட்டின் நிகழ்வுகளின் மாநிலங்களைப் பங்கெடுக்க வைத்தல்**
    - நாட்டின் முன்னேற்றத்திற்கான முன்னுரிமைகள் மற்றும் உத்திகளில் மாநிலங்களையும் இணைத்துக் கொள்ளுதல்

3. **பரவலாக்கப்பட்டத் திட்டமிடல்**
    - திட்டமிடல் நடைமுறையை கீழிருந்து மேல் என்ற முறையில் மாற்றம் கொண்டு வருதல்.

4. **தொலைநோக்கு மற்றும் காட்சித் திட்டமிடல்**
    - நாட்டின் எதிர்காலத்தை கவனத்தில் கொண்டு இடைக்கால மற்றும் நீண்டகால தொலை நோக்கு கட்டமைப்பை வடிவமைத்தல்.

5. **நிபுணர்களின் கூட்டமைப்பை உருவாக்குதல்**
    - அரசின் கொள்கைகளை வடிவமைப்பதாலும், திட்டங்களை செயல்படுத்துவதிலும் அரசுக்கு வெளியில் உள்ள நிபுணர்கள் ஒன்றிணைந்து பங்கு பெற வைத்தல்.

6. **உகந்ததாக்குதல்**
    - அரசின் பல படிநிலைகளில் பணியாற்றுபவர்களை குறிப்பாக பலதுறைகள் ஒன்றிணைந்து செயல்படுமிடங்களில் ஏற்படும் பிரச்சனைகளை களைய தொடர்பு கொள்ளுதல், ஒருங்கிணைத்தல், கைகோர்த்தல் மற்றும் கூட்டிணைத்தல் மூலம் உகந்த பணியை நிதி ஆயோக் செய்கிறது.

7. **சச்சரவுத் தீர்த்தல்**
    - அரசுத்திட்டங்களை வேகமாக செயல்படுத்த மாநில மைய அரசுகளக்கு இடையில். மாநிலங்களுக்கிடையில், அரசுத் துறைகளுக்கிடையில் மற்றும் பிற துறைகளுக்கிடையில் நிலவும் சச்சரவுகளுக்குத் தீர்வுக்கான ஒரு தளத்தை அமைத்துக் கொடுக்கிறது.

8. **வெளியுலகத் தொடர்பை ஒருங்கிணைத்தல்**
    - வெளிநாட்டு நிபுணர்களின் அலோசனைகளையும் பன்னாட்டு நிறுவனங்களிலிருந்து கிடைக்கும் நிதி வளங்களையும் நாட்டின் முன்னேற்றத்துக்குப் பயன்படும் வகையில் பெற்றுத்தரும் பொறுப்பு அலுவலகமாக நிதி ஆயோக் செயல்படும்.

**9. உள்நாட்டு ஆலோசனை வழங்குதல்**

- கொள்கைகள் மற்றும் திட்டங்கள் வகுக்க மாநில மற்றும் மைய அரசுகளுக்கு ஆலோசனைகளை வழங்குகிறது.

**10. திறன் உருவாக்குதல்**

- அரசுத் துறைகளில் திறனை வளர்க்கவும் தொழில் நுட்பத்தை மேம்படுத்தவும், உலக அளவில் தற்போது நடைமுறையில் உள்ள தர அளவுகோள்களை கொண்டும், மேலாண்மை நுட்பங்கள் வழியாகவும் திறன் உருவாக்கம் பணியையும் நிதி ஆயோக் செய்கிறது.

**11. கண்காணித்தல் மற்றும் மதிப்பிடுதல்**

- அரசு செயல்படுத்தும் திட்டங்களை நிதி ஆயோக் கண்காணித்து அதன் விளைகளை மதிப்பீடும் செய்கிறது.
- அடல் புத்தாக்க கொள்கை, ஆயுஸ்மான் பாரத் அணுகுமுறை ஆகியவை தண்ணீர் வளங்களை பாதுகாக்கும் விதமாகவும்.
- இந்திய மருத்தவ கழகத்திற்கு தேசிய மருத்துவ வாரியம் என பெயர் மாற்றம் செய்வதற்கம் நாடாளுமன்றத்தில் அறிக்கையை தாக்கல் செய்தது நிதி ஆயோக்.
- நிதி ஆயோக் ஒரு பெரிய அளவிலான பொறுப்புணர்வைக் கொண்டு வருகிறது. இது பல்வெறு அமைச்சகங்களின் செயல்திறன் குறித்த தரவுகளை சேகரிக்கும் மேம்பாட்டு கண்காணிப்பு மதிப்பீடு அலுவலகத்தை நிறுவியுள்ளது.
- அத்தகைய தரவைப் பயன்படுத்தி, போட்டி கூட்டாட்சிவாதத்தின் உணர்வை வளர்ப்பதற்கு செயல்திறன் அடிப்படையிலான மாநிலங்களின் தரவரிசையை ஆயோக் செய்கிறது. நிதி ஆயோக்கின் வெற்றியை கணிசமான காலத்திற்குப் பிறகு மதிப்பீடு செய்யலாம்.

| ஐந்தாண்டுத் திட்டங்கள் | வருடங்கள் | மாதிரி | முக்கியத்துவம் | இலக்கு % | எட்டியது |
|---|---|---|---|---|---|
| முதல் திட்டம் | 1951-56 | ஹெராட் டோமர் | விவசாயம், நீர்ப்பாசனம் மற்றும் மின்சாரத் திட்டங்கள் | 2.1 | 3.6 |
| இரண்டாம் திட்டம் | 1956-61 | P.C மஹலநோபிஸ் | தொழில் | 4.5 | 4.1 |
| மூன்றாவது திட்டம் | 1961-66 | காட்கில் திட்டம் | அடிப்படைத் தொழில்கள் | 5.6 | 2.2 |
| நான்காவது திட்டம் | 1969-74 | அசோக்ருத்ரா &S.மன்னீ | பங்கீட்டு நிதியுடன் வளர்ச்சி | 5.7 | 3.3 |
| ஐந்தாவது திட்டம் | 1974-79 | D.D.தார் | வறுமை ஒழிப்பு மற்றும் சுயசார்பு | 4.4 | 4.8 |
| ஆறாவது திட்டம் | 1980-85 | ஹரிபி கட்டோ | வறுமை ஒழிப்பு | 5.2 | 5.7 |
| ஏழாவது திட்டம் | 1985-90 | பிரணாப் முகா்ஜி | வேலை வாய்ப்பை உருவாக்குதல் | 5.0 | 6.0 |
| எட்டாவது திட்டம் | 1992-97 | ஜான் மில்லர் | 2000-ல் முழு வேலைவாய்பை சாதிக்கும் வேலையை உருவாக்குதல் | 5.6 | 6.8 |
| ஒன்பதாவது திட்டம் | 1997-02 | - | சமூக நீதியுடன் வளர்ச்சி மற்றும் சமத்துவம் | 7.0 | 5.6 |
| பத்தாவது திட்டம் | 2002-07 | - | வறுமை மற்றும் மக்கள் தொகை வளர்ச்சியைக் குறைத்தல் | 8.0 | 7.2 |
| பதினொன்றாவது திட்டம் | 2007-12 | C.ரங்கராஜன் | விரைவான மற்றும் எல்லா துறைகளிலும் வளர்ச்சி | 8.1 | 7.9 |
| பன்னிரண்டாவது திட்டம் | 2012-17 | | விரைவான மற்றும் எல்லா துறைகளிலும் வளர்ச்சி | 8 | - |

அலகு 3

# இந்திய ரிசர்வ் வங்கி

## மைய வங்கியின் தோற்ற வரலாறு

1656-ல் நிறுவப்பட்ட ஒரு தனியார் வங்கியிலிருந்து தோன்றியதுதான் உலகின் முதல் மைய வங்கியான ஸ்வீடன் நாட்டு ரிக்ஸ் வங்கி. இம்மைய வங்கி 1897-ஆம் ஆண்டு பணத்தை வெளியிடுவதற்கான முழு உரிமையைப் பெற்றது.

- ஆனால், வங்கிக் கலையின் அடிப்படையில் 1864ல் தோற்றுவிக்கப்பட்டு பணத்தை வெளியிட்ட முதல் மைய வங்கி இங்கிலாந்து வங்கியாகும் (Bank of England)
- 1920-ஆம் ஆண்டு பிரஸ்ஸல்ஸ் நகரில் கூட்டப்பட்ட பன்னாட்டு நிதிய மாநாட்டில் (International Finance Conference) எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில் 1921 முதல் 1954ம் ஆண்டு வரையான காலகட்டத்தில் பெரும்பாலான நாடுகளில் மையவங்கி அமைப்புகள் தோற்றுவிக்கப்பட்டன.

## மைய வங்கியின் பணிகள் (Functions of Central Bank)

- இந்தியாவின் மைய வங்கி இந்திய ரிசர்வ் வங்கி என அழைக்கப்படுகிறது. இது பணவியல் கொள்கை மூலம், பண அளிப்பினை மேலாண்மை செய்கிறது.
- இந்திய ரிசர்வ் வங்கி சட்டம், 1934ன் படி, ஏப்ரல்-1ஆம் தேதி 1935 முதல் ரிசர்வ் வங்கி தனது பணியினை துவங்கியது.
- துவக்கத்தில் வங்கியின் மூலதனம் ரூ.100 மதிப்பு கொண்ட சம பங்குகளாக பிரிக்கப்பட்டு தனியார் வசம் இருந்தன.
- இந்திய சுதந்திரத்திற்குப் பிறகு, குறிப்பாக ஜனவரி 1, 1949 அன்று இந்திய ரிசர்வ் வங்கி நாட்டுடமையாக்கப்பட்டது.

## பணிகள்

1. **பண அதிகார அமைப்பு (Monetary Authority)**

- இது இந்தியாவில் பண அளிப்பினை கட்டுப்படுத்துவதன் மூலம் அந்நிய செலாவணி பரிவர்த்தனை விகிதத்தினை நிலைப்படுத்துதல், சாதகமான செலுத்து நிலையைப் பேணுதல், நிதி நிலைத் தன்மையை ஏற்படுத்துதல், பண வீக்கத்தை கட்டுப்படுத்துதல், மற்றும் வங்கியமைப்பை உறுதியாக்குதல் ஆகியவற்றை செய்கிறது.

2. **காகிதப்பண வெளியீடு**

- இந்தியாவில் நாணயங்கள் மற்றும் ஒரு ரூபாய் காகிதப்பணத்தைத் தவிர அனைத்து வகையான காகிதப் பணத்தை வெளியிடுவதில் முற்றுரிமை பெற்ற நிறுவனம் ரிசர்வ் வங்கியாகும். மேலும், பண மற்றம் கடன் அளவுகளை இது மேலாண்மை செய்கிறது. புழக்கத்தில் உள்ள போலியான பணத்தினை கட்டுப்படுத்தும் பொறுப்பும் மைய வங்கிக்கு உண்டு.

3. **வங்கி உரிமங்கள் வழங்குபவர்**

- வங்கிகள் முறைப்படுத்துதல் சட்டம், பிரிவு 22ன் படி ஒவ்வொரு வணிக வங்கியும் இந்தியாவில் வங்கித் தொழில் செய்ய மைய வங்கியிடம் உரிமம் பெற வேண்டியது அவசியம் ஆகும். இப்பணியையும் ரிசர்வ் வங்கி செய்கின்றது.

4. **அரசுக்கான வங்கி**

- இது மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கான வங்கி ஆகும். அரசுகளுக்கு குறுகியகால கடன்களை தருகிறது. இது அரசு கடன்கள், அரசு கடன் தொடர்பான சேவைகள், அரசு கடன் பத்திரங்களை உருவாக்கி விற்பனை செய்வது ஆகிய பணிகளைச் செய்கின்றது. மேலும், அரசுக்கு வங்கி மற்றும் நிதி தொடர்பான ஆலோசனைகளை வழங்குகிறது.

5. **வங்கிகளின் வங்கி**

- இந்திய ரிசர்வ் வங்கி அனைத்து வங்கிகளுக்கும் தலைமை வங்கியாகும். இது வங்கிகளுக்கு வேண்டிய கடன்களை அளிக்கிறது. அவைகளின் வைப்புக்களை ஏற்கிறது, மாற்றுச் சீட்டுக்களை மறு தள்ளுபடி செய்கிறது. அதனால் இது வங்கிகளின் வங்கி எனப்படுகிறது.

6. **கடைசி நிலைக்கடன் ஈவோன்**

- வணிக வங்கிகளுக்கு தீர்க்க இயலாத நிதிச் சிக்கல்கள் ஏற்படும்பொழுது, நிதிக்கான மற்ற ஆதாரங்கள் இல்லாத சூழ்நிலையில் அச்சிக்கலிருந்து மீள்வதற்கு இந்திய ரிசர்வ் வங்கி ஈட்டுக்கடனை அளித்து உதவுகிறது.

7. **தீர்வாக செயல்படுகின்றது**

- வங்கிகளுக்கிடையே நடக்கும் பரிவர்த்தனைகளை தனது 14 தீர்வகங்களைக் கொண்டு இந்திய ரிசர்வ் வங்கி சமன் செய்கின்றது. பரிவர்த்தனைக் கருவிகளை பரிமாறிக் கொள்ள உதவுவதுடன், பரிவர்த்தனை தொடர்பான அறிவுறுத்தல்களையும் வழங்குகிறது.

8. **அந்நிய செலவாணி பாதுகாவலன்**

- இது அந்நிய செலாவணி இருப்புக்களை பாதுகாக்கும் பணியினை செய்கிறது. 1999-ம் ஆண்டு அந்நிய செலாவணி மேலாண்மைச் சட்டம் (Foreign Exchange Management Act-FEMA) சட்டத்தின் படி இது அந்நிய செலாவணி மேலாண்மையும் நிர்வகிப்பையும் மேற்கொள்கிறது. அந்நிய பணத்திற்கு எதிரான இந்திய ரூபாயின் பரிமாற்ற விகிதத்தை நிலைப்படுத்துவதற்காக வெளிநாட்டு பணங்களை அவ்வப் பொழுது வாங்கி விற்கும் நடவடிக்கையில் ஈடுபடுகிறது.

9. **பொருளாதாரத்தை நெறிப்படுத்துகிறது**

- பணவியல் கொள்கையை அடிப்படையாக கொண்டு பொருளாதாரத்தை நெறிப்படுத்த விரும்பத்தகுந்த பாதையில் கொண்டு செல்கிறது. மேலும், தேசிய வருவாய், வேலைவாய்ப்பு, செலவு, சேமிப்பு, முதலீடு போன்ற முக்கிய குறியீடுகளை தொடரந்து கண்காணித்து நெறிப்படுத்துகிறது.

10. **அரசு கடன் பத்திரங்களை நிர்வகிக்கிறது.**

- குறிப்பிட்ட சதவிகித்திலான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை அரசின் கடன்பத்திரங்களாக கொண்டுள்ள நிறுவனங்களை இந்திய ரிசர்வ் வங்கி கண்காணித்து நிர்வகிக்கின்றது.

**11. செலுத்துதல் மற்றும் தீர்வு செய்வதில் நெறியாளராகவும், மேலாளராகவும் செயல்படுகிறது.**

- 2007-ஆம் ஆண்டு செலுத்துதல் மற்றும் தீர்வுச் சட்டம் (The paymentand Settlement System Act.2007-PSS Act) இந்திய ரிசர்வ் வங்கிக்கு நாட்டின் செலுத்துதல் மற்றும் தீர்வு செய்வதற்கான மேற்பார்வையிடும் அதிகாரத்தை வழங்கியுள்ளது.
- ஆகவே, ரிசர்வ் வங்கி பாதுகாப்பான மற்றும் திறமையான செலுத்துதல் மற்றும் தீர்வுகளை மேற்பார்வையிடுவதன் மூலம் மேம்பாட்டிற்கு வழிவகுக்கின்றது.

**12. மேம்பாட்டு பணி**

- இந்திய ரிசர்வ் வங்கி அமைப்பினை ஏற்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கின்றது. அதன் மூலம் சிறந்த உற்பத்தித் திறன் கொண்ட துறைகளுக்கு கடன்கள் வழங்கப்படுவதை உறுதி செய்கின்றது. தேசிய குறிக்கோள்கை நிறைவேற்றும் வகையில் பல்வேறு பரந்த மேம்பாட்டு பணிகளை மேற்கொள்கின்றது.
- இது மேலும், நாட்டின் நிதிக்கட்டமைப்பினை ஏற்படுத்தும் நிறுவனங்களையும் அமைக்கின்றது. இதனுடன் கூட, நாட்டில் நிதிச் சேவைகள் மற்றும் நிதிக் கல்வியறிவு ஆகியவற்றை விரிவாக்கும் பணியினையும் செய்கின்றது. இதற்கான கல்வி, ஆய்வு நிறுவனங்களையும் நடத்துகின்றது.

**13. பணவியல் மற்றும் இதர தகவல்களை வெளியிடுகிறது**

- பணம், வங்கி மற்றும் முக்கிய பொருளாதாரப் புள்ளிவிவரங்களை வெளியிடுகிறது. மேலும் இந்தியாவின் பொருளாதாரக் கொள்கைகளை திறனாய்கிறது. புள்ளிவிவரங்களை திரட்டி, வரிசைப்படுத்து இந்திய ரிசர்வ் வங்கி வெளியீடு (Reserve Bank of Idnia Bulletin) மூலம் மாத, காலாண்டு, ஆண்டு விவரங்களை வெளியிடுகிறது.

**14. பரிவர்த்தனை மேலாளர் மற்றம் நெறியாளர்**

- சர்வதேச பண நிதியத்தின் (International Moentary Fund) இந்திய உறுப்பினர் பிரதிநிதியாக இந்திய ரிசர்வ் வங்கி விளங்குகிறது.
- நிதியத்திலிருந்து பெறப்படும் அந்நிய செலவாணியை மேலாண்மை செய்வதும், அதிகாரம் அளிக்கப்பட்ட அந்நிய செலாவணி விற்பனையாளர்களான வணிக வங்கிகளை நெறிப்படுத்தும் செயலையும் இந்திய ரிசர்வ் வங்கி செய்கிறது.

**15. வங்கி குறைதீர்ப்பாய திட்டம்**

- இந்திய ரிசர்வ் வங்கி 1952ல் வங்கி குறைதீர்ப்பாயத்தினை அறிமுகப் படுத்தியது. இத்திட்டத்தின் கீழ், வங்கிகள் தொடர்பாக ரிசர்வ் வங்கிக்கு வரும் குறை தீர்ப்பாயம் களைகின்றது. இணைய வழியில் வரும் புகார்கள் உட்பட அனைத்து வழிகளில் வரும் புகார்களையும் இந்த குறை தீர்ப்பாயம் கணக்கில் எடுத்துக் கொள்கின்றது.

**16. இந்திய வங்கி நெறிமுறை மற்றும் மதிப்பீடுகள் வாரியம்**

- வங்கிகளின் திறனை அளவிடும் விதமாக உலகளவில் ஏற்கப்பட்டுள்ள நெறிமுறைகள் மற்றும் மதிப்பீடுகள் (அடிப்படையில்) இந்திய ரிசர்வ் வங்கி,

இந்திய வங்கி நெறிமுறை மற்றும் மதிப்பீடுகள் வாரியத்தை (Banking Codes and Standards Board of India- BCSBI) அமைத்துள்ளது.

•

**இந்திய ரிசர்வ் வங்கி**
**வரலாறு**

- 1934ம் ஆண்டு சட்ட விதிப்படி 1935ம் ஆண்டு ஏப்ரல் 1ம் தேதி அமைக்கப்பட்டது.
- ஜனவரி 1ம் தேதி 1949ம் ஆண்டு தேசிய மயமாக்கப்பட்டு மத்திய அரசுக்குச் சொந்தமானது.
- 1937ல் தலைமை அலுவலகம் கல்கத்தா-விலிருந்து மும்பைக்கு மாற்றப்பட்டது.
- ஓஸ்போர்ன் ஸ்மித் (Osborne smith )RBI முதல் ஆளுநர் ஆவார்.

**இந்திய ரிசர்வ் வங்கியின் தோற்றம்**

- இம்பீரியல் பாங் ஆப் இந்தியா பண வெளியீடு மற்றும் மைய வங்கிக்கான பிற கடமைகளை ஆற்றி வந்தது. 1926 ஆம் ஆண்டில் ஹில்டன்-யங் ஆணையம் அல்லது இந்திய நாணய மற்றும் நிதியியல் தொடர்பான இராயல் ஆணையம் (ஜே.எம்.கீன்ஸ் மற்றும் சர் எர்னெஸ்ட் கேபிள் இதன் உறுப்பினர்கள்) ஒரு மைய வங்கி உருவாக்கப் பரிந்துரைத்தது. அதன் விளைவாக, இந்திய ரிசர்வ் வங்கி சட்டம் 1934ல் உருவாக்கப்பட்டு இந்திய ரிசர்வ் வங்கி ஏப்ரல் 1, 1935 முதல் செயல்பாட்டிற்கு வந்தது. இந்திய ரிசர்வ் வங்கியின் ரூ.5 கோடி மூலதனம் ரூ.100 மதிப்புள்ள முழுவதும் செலுத்தப்பட்ட பங்குகளால் உருவாக்கப்பட்டது. பங்கு முதல் தொகை முழுவதும் தனியார் பங்குதாரர்கள் வசம் இருந்தது. அதன் தலைமை அலுவலகம் கொல்கத்தாவில் இருந்தது. பின்னர் 1937ல் மும்பைக்கு மாற்றப்பட்டது.
- சுதந்திரம் அடைந்த பிறகு, இந்திய அரசாங்கம் ரிசர்வ் வங்கி (பொது உரிமைக்கு மாற்றுதல்) சட்டம் 1948ஐ நிறைவேற்றியது மேலும் தனியார் பங்குதாரர்களுக்குச் சரியான இழப்பீட்டுத் தொகையை வழங்கிய ரிசர்வ் வங்கியை அரசுக்குச் சொந்தமான மைய வங்கியாக செயல்பட்டு வருகிறது. அப்பொழுது இதில் மூன்று துறைகள் மட்டுமே இருந்தன. இந்திய ரிசர்வ் வங்கி 1947 வரை பர்மா நாட்டிற்கும் ஜீன் 1948 வரை பாகிஸ்தான் நாட்டிற்கும் மைய வங்கியாகச் செயல்பட்டது

**இந்திய ரிசர்வ் வங்கியின் கட்டமைப்பு**

- இந்திய ரிசர்வ் வங்கியின் மத்தியத் தலைமையகம் மும்பையில் அமைந்துள்ளது. 2017ஆம் ஆண்டு முதல் இந்த மத்தியத் தலைமை அலுவலகம் 33 துறைகளைக் கொண்டுள்ளது. மும்பை, தில்லி, கொல்கத்தா மற்றும் சென்னை ஆகிய நான்கு மண்டல அலவலகங்கள் துணை நிலை ஆளுநர்களின் தலைமையில் செயல்படும் வட்டார வாரியங்களின் கீழ் இயங்கி வருகின்றன. 19 பிராந்திய அலுவலகங்களும் 11 துணை அலுவலகங்களும் ரிசர்வ் வங்கியின் கீழ் செயல்படுகின்றன. (இந்திய ரிசர்வ்

வங்கி மத்திய இயக்குநர்கள் வாரியத்தால் நிர்வகிக்கப்படுகிறது. இந்த வாரியத்தின் 21 உறுப்பினர்களும் இந்திய அரசால் நியமிக்கப்படுவார்கள்.

- அதில் உள்ளவர்கள் பின்வருமாறு
- ஒரு ஆளுநர் மற்றும் நான்கு துணை நிலை ஆளுநர்கள் நான்கு ஆண்டுகளுக்குப் பதவி வகிக்கும் வகையில் நியமிக்கப்படுவார்கள்
- பல்வேறு துறைகளில் இருந்து பத்து இயக்குநர்கள்
- இரண்டு அரசு அதிகாரிகள்
- நான்கு இயக்குநர்கள் (வட்டார வாரியங்களில் இருந்து ஒவ்வொருவர்)

**இந்திய ரிசர்வ் வங்கியின் பணிகள்**

- இந்திய ரிசர்வ் வங்கியின் பணிகளை மூன்று தலைப்புகளில் தொகுக்கலாம்.
  1.தலைமை மற்றும் மேற்பார்வைப் பணிகள்
  2.பாரம்பரியப் பணிகள் மற்றும்
  3.மேம்பாட்டுப் பணிகள்

**நிர்வாகம்**

- மைய வங்கி/மற்ற இந்திய வங்கிகளின் நெறியாளர்
- கடைசி நிலைக் கடன் ஈவோன்
- ஆளுநர், நான்கு துணை ஆளுநர்கள் மற்றும் மைய அரசால் நியமிக்கப்படும் மைய நிர்வாகக் குழு உறுப்பினர்கள்

**பணிகள்**

- காகிதப் பணம் வெளியிடுதல்
- அரசின் வங்கியாகச் செயல்படுதல் (அரசிற்கான நிதி வருவாயைப் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் அரசின் செலவினங்களுக்குப் பணம் வழங்குதல்)
- இந்திய வங்கி அமைப்புக்களை நெறிப்படுத்துதல்
- அந்நியச் செலாவணியின் பாதுகாவலன்
- கடன் அளிப்பை நெறிப்படுத்துதல்

**ரிசர்வ் வங்கியின் பங்கு**

- பணப்பரிமாற்றத்தைப் பராமரிக்கும் பொறுப்பும் கண்காணிக்கும் கடமையும் ஓர் அரசுக்கு இருக்கிறது. பொதுவாகப் பணம் பதுக்கி வைக்கப்படுவது பொருளியலில் தவிர்க்கப்பட வேண்டும். இதனால் வங்கிகளில் பணம் சேமிக்கப்படுகிறது.
- வங்கிகளில் சேமிக்கப்படும் பணத்தில் பெரும் பங்கு தொழில் வளர்ச்சிக்கும் பொருளியல் வளர்ச்சிக்கும் ஏழைகளின் நலனுக்கும் பயன்படுத்தப்படுகிறது.
- டாக்டர்.பி.ஆர்.அம்பேத்கரின் "பணத்தின் சிக்கலும் அதன் தீர்வும்" (The Problem of the rupee and its Solution) என்ற ஆராய்ச்சிக் கட்டுரையின் அடிப்படையில் தான் இந்திய ரிசர்வ் வங்கியின் அடிப்படைச் சட்டம் 1934ல் உருவாக்கப்பட்டுள்ளது.

- இந்தியாவில் அனைத்து வங்கிகளும் நாட்டுடைமையாக்கப்பட்டுள்ளதை (1969) அறிவோம். இந்தியாவில் பணப்புழக்கத்தை ஒழுங்குபடுத்தும் பணியினை இந்திய ரிசர்வ் வங்கி மேற்கொள்கிறது.
- இந்திய ரிசர்வ் வங்கி ஏப்ரல் 1, 1935 முதல் செயல்பட தொடங்கியது. 1937லிருந்து நிரந்தரமாக மும்பையில் இயங்கி வருகிறது. இது 1949இல் நாட்டுடைமையாக்கப்பட்டது. அச்சடிக்கப்பட்டப் பணத்தில் 85% புழக்கத்தில் விடப்படுகிறது. ஆகஸ்ட் 2018 நிலவரப்படி இந்தியாவில் ரூபாய் 19 லட்சம் கோடி மதிப்பிலான பணம் புழக்கத்தில் உள்ளது.

### பணம்- விலைத் தொடர்பு

- பணத்துக்கும் பொருள்களின் விலைக்கும் நெருக்கமான தொடர்பு உள்ளது. ஏனெனில் தற்போது உலகில் தயாரிக்கப்படும் பொருள்களில் 90 விழுக்காடு விற்பனை அல்லது சேவைத் தொழிலை இலக்காகக் கொண்டே தயாரிக்கப்படுகின்றன. வேளாண்மையிலும் சொந்தத் தேவைக்காக விளைவிப்பதை விட பணப் பயிர்களை அதிகம் உற்பத்தி செய்யப்படுவது சந்தை மற்றும் பணத்தின் முக்கியத்துவத்தை உணர்த்துவதாக உள்ளது.
- பணத்துக்கும் விலைக்கும் உள்ள தொடர்பு பணவியல் கொள்கையோடு தொடர்புடையது.
- பண விநியோக வளர்ச்சிக்கும் நீண்ட கால விலை வீழ்ச்சிக்கும் இடையிலான நெருங்கி உறவினை நாம் காணமுடியும். ஒரு நாட்டின் பொருளாதார நிலைத்தன்மையில் விலைக் கட்டுப்பாட்டுக்கு முக்கிய பங்களிப்பு உள்ளது. இந்தியாவில் ரிசர்வ் வங்கி இதனைக் கண்காணித்து வருகிறது.
- நாடுகளுக்கு இடையிலான பணம் செலாவணி என அழைக்கப்படுகிறது. உள்நாட்டில் அன்னிய நாட்டுச் செலவாணி வெளிநாட்டுச் செலாவணி என அழைக்கப்படுகிறது.
- உலக நாடுகளுக்கு இடையிலான செலாவணி அமெரிக்க டாலர் அடிப்படையில் மதிப்பிடப்படுகிறது. இந்த மதிப்பு நாட்டுக்கு நாடு வேறுபடுகிறது. உலக வணிகத்தின் பெரும்பகுதி அமெரிக்க டாலர் மதிப்பிலேயே நடைபெறுகிறது.

### இந்தியாவில் பணம் எவ்வாறு அச்சிடப்படுகிறது?

- இந்தியாவில் 1917ல் தான் முதன் முதலில் ஒரு ரூபாய் மற்றும் இரண்டு ரூபாய் நோட்டுகள் தயாரித்து வெளியிடப்பட்டன. 1935-ல் பணப் பொறுப்பு அனைத்தும் இந்திய ரிசர்வ் வங்கி கைக்கு வந்தது. அதன்பிறகு 500 ரூபாய் நோட்டு பணத்தை அறிமுகப்படுத்தியது. 1940-ம் ஆண்டுவரை ஆறாம் ஜார்ஜின் உருவம் பொறித்த பணமே புழக்கத்தில் இருந்தது. சுதந்திரத்திற்குப் பிறகு இந்திய அரசால் நோட்டுகள் வெளியிடப்பட்டன.
- ஆங்கிலேய அரசு, 1925ல் மகாராஷ்டிரா மாநிலத்தில் உள்ள நாசிக்கில் ஒரு அச்சகத்தை அமைத்து மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு ரூபாய் நோட்டுகளை அச்சடிக்க தொடங்கியது. மத்தியப்பிரதேசத்திலுள்ள தேவாஸில் 1974-ல் ஓர் அச்சகம் தொடங்கப்பட்டது. இந்த இரு அச்சகங்களைத் (Security Printing

and Minting Corporation of India Ltd,) தவிர, 1990களில் கர்நாடக மாநிலத்திலுள்ள மைசூரிலும், மேற்கு வங்காளத்திலுள்ள சல்பானியிலும் ரூபாய் மற்றும் வங்கிகள் சம்பந்தப்பட்ட ஆவணங்களை அச்சடிக்க மேலும் இரு அச்சகங்களை ரிசர்வ் வங்கி தொடங்கியது.

- எவ்வளவு பணம் அச்சடிக்க வேண்டும் என்பதையும், எப்படிப் பாதுகாப்பாக உரிய இடங்களுக்குக் கொண்டு செல்ல வேண்டும் என்பதையும் இந்திய ரிசர்வ் வங்கியே முடிவு செய்கிறது. இங்கு சுமார் பத்தாயிரம் தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர். இலங்கை, பூடான், ஈராக், ஆப்பிரிக்கா போன்ற நாடுகளுக்கும் ஒப்பந்த அடிப்படையில் அந்தந்த நாட்டுப் பணம் இந்த அச்சகங்களில் அச்சடிக்கப்பட்டு அனுப்பப்படுகின்றன.
- பத்தாயிரம் ரூபாய் மதிப்புடைய நோட்டுகள் அச்சடிக்க இந்திய ரிசர்வ் வங்கிக்கு அதிகாரம் இருந்தாலும், தற்போது அதிகபட்சம் இரண்டாயிரம் ரூபாய் மதிப்பு வரையிலான பணத்தை மட்டுமே அச்சடிக்கிறது.

**காகித பணம்**

- ஷெர்ஷா சூரி (Sher shah suri) என்பவரால் ரூ.1க்கு 40 செம்பு நாணயங்கள் என்ற விகிதத்தில் முதல் ரூபாய் வெளியிடப்பட்டுள்ளது.
- சமஸ்கிருதச் சொல்லான ரௌப்பியா (Raupya) விலிருந்து ரூபாய் என்ற வார்த்தை தோன்றியது.
- இந்தியாவின் பன்முகத் தன்மையை விளக்கும் விதமாக ஒவ்வொரு ரூபாய் நோட்டிலும் அதன் மதிப்பு 17 மொழிகளில் எழுதப்பட்டிருக்கும் (முன்பக்கத்தில் ஆங்கிலத்திலும் ஹிந்தியிலும் பின்பக்கத்தில் மற்ற 15 மொழிகளிலும்.

**இந்திய ரிசர்வ் வங்கியின் சாதனைகள்**

- உலகின் சிறந்த மத்திய வங்கிகளில் இந்திய ரிசர்வ் வங்கியும் ஒன்று. 2008ல் ஏற்பட்ட உலகப் பொருளாதார மந்த நிலை காலத்தில் இந்திய ரிசர்வ் வங்கி தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு இந்தியப் பொருளாதாரத்தைக் காப்பாற்றியது.
- வேளாண்மை மற்றும் கிராமப்புற மேம்பாட்டுக்கான தேசிய வங்கி (நபார்டு) ஒரு காலத்தில் இந்திய ரிசர்வ் வங்கியின் துணை நிறுவனமாக இருந்தது. இவ்வங்கி உலகின் முதல் வகையானதாகத் திகழ்கிறது.
- 2016-17இல் மேற்கொள்ளப்பட்ட பண மதிப்பிழப்பு நடவடிக்கை ஒரு மிகப்பெரிய வெற்றியாக அமைந்தது. ஏனெனில் இந்திய ரிசர்வ் வங்கி தலைமையின் செயல்பாடே காரணம்.

**பொதுத்துறை மற்றும் தனியார் துறை வங்கிகள்**

- அரசாங்கத்தின் பங்குகளை பெரும் பான்மையாகக் கொண்ட வங்கிகள் பொதுத்துறை வங்கிகளாகும். எடுத்துக்காட்டாக பாரத ஸ்டேட் வங்கி (SBI) ஒரு பொதுதுறை வங்கியாகும்.

- இந்தியாவிலுள்ள மொத்த வங்கிகளில், 72.9% வங்கிகள் பொதுத்துறை வங்கிகளாகவும், மீதமுள்ளவை தனியாரால் நிர்வகிக்கப்படும் வங்கிகளாகவும் உள்ளன.
- எண்ணிக்கை அடிப்படையில் 27 பொதுத்துறை வங்கிகளும், 22 தனியார் வங்கிகளும் உள்ளன.
- தலைமை வங்கியான இந்திய ரிசர்வ் வங்கி (RBI) தன்னுடைய வெவ்வேறு வங்கி ஆட்சியின் மூலம் வங்கிகளுக்கு பணம் வழங்குதல் மற்றும் சிறிய அளவிலான நிதி வங்கிகளுக்கு உரிமம் வழங்குதல் (SFB) ஆகிய பணிகளைச் செய்ய அனுமதி அளித்துள்ளது. இது அரசாங்கத்தின் நிதி ஆதாரத்தைப் பெருக்கும் முயற்சிக்கான ஒரு ஊக்கியாகும்
- இதன் விளைவாக ஏர்டெல் பணம் செலுத்தும் வங்கி மற்றும் பே.டி.எம் பணம் செலுத்தும் வங்கி (PAY TM) போன்றவை உருவாகியுள்ளன.

### வங்கிகள் தேசியமயமாக்கப்படல்

- 1951 ஆம் ஆண்டிலிருந்து ஐந்தாண்டுத் திட்டங்கள் உருவாயின. பொருளாதாரத்திட்டமிடலின் முதன்மை நோக்கம் சமூக நலமாகும்.
- அரசு 14 பெரிய வணிக வங்கிகளை ஜீலை 19, 1969 அன்று தேசியமயமாக்க முடிவு செய்தது. 1980 ஆம் ஆண்டில், அரசு மேலும் 6 வணிக வங்கிகளை தேசியமயமாக்கியது.

### தேசியமயமாக்கலின் நோக்கங்கள்

1. தேசிய மயமாக்கலின் முதன்மையான நோக்கம் சமூக நலத்தை அடைவதேயாகும். வேளாண்மை, சிறு தொழில் மற்றும் குடிசைத் தொழில் நிறுவனங்களின் பங்களிப்பை விரிவு படுத்துவதற்கும், பொருளாதார முன்னேற்றத்திற்கும் நிதி தேவைப்பட்டது.
2. தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் தனியார் முற்றுரிமையைக் கட்டுப்படுத்துவதற்கும் சமூகத்தில் தேவையான பகுதிகளுக்கு இலகுவாகக் கடன் அளிப்பதற்கும் பேருதவியாக இருந்தன.
3. இந்தியாவில் ஏறத்தாழ 70% மக்கள் கிராமப்புறங்களில் வாழ்ந்து வருகின்றனர். எனவே, கிராமப்புற மக்களிடையே வங்கிச் செயல்பாடுகளை ஊக்குவித்தல் மிகுந்த அவசியமாயிருந்தது.
4. வங்கி வசதிகள் இல்லாத இடத்தில் வட்டாரங்களிடையே இருந்த ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்க தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் உதவுகின்றன.
5. சுதந்திரத்திற்கு முன் இருந்த வங்கிகளின் எண்ணிக்கை போதுமானதாக இல்லை. தேசிய மயமாக்கப்பட்ட பிறகு கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் பல புதிய வங்கிக் கிளைகள் தொடங்கப்பட்டன.
6. தேசிய மயமாக்கப்பட்ட பின் வேளாண் துறை மற்றும் அதைச் சார்ந்த பிற துறைகளுக்குத் தேவையான கடன்களை வங்கிகள் கொடுக்க ஆரம்பித்தன.
7. 1991ஆம் ஆண்டின் புதிய தொழிற் கொள்கைக்குப் பிறகு இந்திய வங்கித்துறை பன்முகப் போட்டித் திறமை மற்றும் உற்பத்தித் திறன் போன்ற பல்வேறு முகங்களை எதிர்நோக்கி வருகிறது. மேற்கூறிய முன்னேற்றங்கள்

இருந்தும், கிராமம் மற்றும் குடிசைப் பகுதியில் வாழும் மக்கள் தங்களின் கடன் தேவைக்கு, உள்ளூரில் கடன் வழங்குபவர்களைச் சார்ந்திருக்க வேண்டி உள்ளது.

**தேசியமயமாக்குதல்**

- 1969-50 கோடிக்கு மேல் வைப்புத் தொகை கொண்ட 14 வங்கிகள் தேசிய மயமாக்கப்பட்டன.
- 1980-200 கோடிக்கு மேல்வைப்புத் தொகை கொண்ட 6 வங்கிகள் தேசிய மயமாக்கப்பட்டன.

**19 ஜீலை 1969**

1. அலகாபாத் வங்கி
2. பாங்க் ஆப் பரோடா
3. பாங்க் ஆப் மஹாராஷ்டிரா
4. கனரா வங்கி
5. மத்திய வங்கி
6. தேனா வங்கி
7. இந்தியன் வங்கி
8. இந்தியன் ஓவர்சீஸ் வங்கி
9. பஞ்சாப் நேஷனல் வங்கி
10. சின்டிகேட் வங்கி
11. யூனியன் வங்கி
12. யுனைடெட் வங்கி
13. யூகோ வங்கி
14. பாங்க் ஆப் இந்தியா

**15 ஏப்ரல் 1980**

1. ஆந்திரா வங்கி
2. கார்ப்பரேஷன் வங்கி
3. நியூ பாங்க் ஆப் இந்தியா
4. ஓரியன்டல் பாங்க் ஆப் காமர்ஸ்
5. பஞ்சாப்-சிந்து வங்கி
6. விஜயா வங்கி

- விவசாய மறுகடன் மேம்பாட்டு கழகம் (Agricultural Refinance Development Corporation – ARDC)
- ஜீலை 1,1963-ல் விவசாய மறுகடன் மேம்பாட்டு கழகம் ஆரம்பிக்கப்பட்டது.

**நோக்கங்கள்**

- மத்திய நிலவள வங்கிகள், மாநில கூட்டுறவு வங்கிகள் மற்றும் பட்டியல் வங்கிகள் போன்ற தகுதிவாய்ந்த அமைப்பு களுக்கு தேவையான மறுநிதியினை வழங்குவது

- இந்திய ரிசர்வ் வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட மத்திய நிலவள வங்கிகள், மாநில கூட்டுறவு வங்கிகள் மற்றும் பட்டியல் வங்கிகள் வெளியிடும் கடன் பத்திரங்களை வாங்கி அதன் மூலம் நிதியளிப்பினை செய்வது.
- வட்டார ஊரக வங்கிகள். (Regional Rural Banks – RRBs)
- மறைந்த பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்களின் 20-அம்ச பொருளாதார திட்டத்தின் ஒரு முக்கிய அம்சம் கிராமப்புறங்களில் வசிக்கும் விவசாயிகள் மற்றும் கைவினைஞர்களை தொடர் கடன்சூழலில் (Indebtedness) இருந்து விடுவிப்பதாகும். அக்கால கட்டத்தில் அமல்படுத்தப்பட்ட புதிய பொருளாதார திட்டத்தினை தொடர்ந்து வட்டார ஊரக வங்கிகள் 1975ம் ஆண்டு ஆரம்பிக்கப் பட்டன.
- இவைகளுக்கான மூலதன 50% மைய அரசாலும் 15% மாநில அரசாலும் 35% நடத்துகின்ற வணிக வங்கிகளாலும் அளிக்கப்பட்டது.
- இவ்வங்கிகளின் நோக்கம் விவசாயிகளுக்கு, குறிப்பாக சிறு மற்றும் குறு விவசாயிகள் நிலமற்ற விவசாய தொழிலாளர்கள், கைவினைஞர்கள் மற்றும் சிறு தொழில்முனைவோர்களுக்கு கடன் வழங்குவதன் மூலம் ஊரக பகுதியில் விவசாயம், வர்த்தகம், தொழில் மற்றும் இதர உற்பத்தி நடவடிக்கைகள் மேம்படுத்துவது ஆகும்.

**நபார்டு வங்கியின் பணிகள்**

- நபார்டு வங்கி ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சியை மேம்படுத்தும் வகையில் அனைத்து வகையான உற்பத்தி மற்றும் முதலீட்டுக்காக விவசாயம், சிறு தொழில்கள், குடிசை மற்றும் கிராமத் தொழில்கள் கைவினைத் தொழில்கள், மற்றும் இதர ஊரக தொழில் நடவடிக்கைகளுக்கான மறுகடனை வழங்கிறது.
- இது மாநில கூட்டுறவு வங்கிகள், வட்டார ஊரக வங்கிகள், நிலவள வங்கிகள் மற்றும் இந்திய ரிசர்வ் வங்கியால் அங்கீகரிக்கப் பட்ட இதர நிதிநிறுவனங்கள் ஆகியவற்றிற்கு குறுகியகால, மத்தியகால மற்றும் நீண்டகால கடன்களை வழங்குகிறது.
- கூட்டுறவு கடன் வழங்கும் சங்கங்களின் பங்கு முதலீட்டை வழங்கும் பொருட்டு மாநில அரசுகளுக்கு 20 ஆண்டு நீண்டகால கடன்களை நபார்டு வங்கி வழங்குகிறது.
- மைய அரசினால் அங்கீகரிக்கப்பட்ட அல்லது விவசாயம் பத்திரங்களை பெற்றிருக்கும் நிறுவனங்களுக்கு நீண்டகால கடனை அளிக்கிறது.
- மைய அரசு, மாநில அரசுகள் திட்டக்குழு (தற்பொழுது நிதி ஆயோக்) மற்றும் மைய, மாநில அரசுகளின் - கைவினைத் தொழில்கள், இதர மிகச்சிறு தொழில்களுக்கு உதவும் நிறுவனங்களை ஒருங்கிணைத்து செயலாற்றும் நடவடிக்கைகளை நபார்டு வங்கி மேற்கொண்டுள்ளது.
- நபார்டு வங்கி, வட்டார ஊரக வங்கிகள் மற்றும் துவக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களை தவிர்த்த அனைத்து கூட்டுறவு வங்கிகளையும் ஆய்வு செய்யும் பணியினை செய்கிறது.
- வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக்கான ஆய்வுகளை மேம்படுத்தும் விதமாக ஆய்வு மற்றும் வளர்ச்சி நிதியினை பராமரிக்கிறது.

1. **இந்திய தொழில் நிதிக் கழகம்**

- தொழில் நிதி மற்றும் மேம்பாட்டு நிறுவன சங்கிலித் தொடரில் முதன்மையாக ஆரம்பிக்கப்பட்டது நிறுவனம் இந்திய தொழில் நிதிக் கழகம் ஆகும். பாராளுமன்ற சட்டப்படி இது 1948ஆம் ஆண்டு ஜீலை 1 ல் அமைக்கப்பட்டது.

2. **இந்திய தொழிற் கடன் மற்றும் முதலீட்டுக் கழகம் (Industrial Credit and Invesment Corporation of India (ICICI))**

- இந்திய தொழிற் கடன் மற்றும் முதலீட்டுக் கழகம் 1955ஆம் ஆண்டு ஜனவரி 5 ஆம் நாள் ஒரு நிறுவனமாக ஆரம்பிக்கப்பட்டது. உலக வங்கியிலிருந்து பெறப்படும் இந்திய தொழிற்கடன்களை முறைப்படுத்தி அளிப்பதும், மூலதனச் சந்தையை கட்டமைப்பதும் இக் கழகத்தின் நோக்கமாகும்.

3. **இந்திய தொழில் மேம்பாட்டு (Industrial Development Bank of India (IDBI))**

- பிப்ரவரி 15, 1976 வரை இந்திய ரிசர்வ் வங்கியின் முழு துணை அமைப்பாக இருந்தது. பின்னர் இது பிரிக்கப்பட்டு அதே ஆண்டின் பிப்ரவரி 16 முதல் இந்திய அரசிற்கு சொந்தமான தன்னாட்சி பெற்ற ஒரு கழகமாக மாறியது.
- மற்ற தொழில் நிதி நிறுவனங்களுக்கு நிதியளிப்பது
- தொழிற் நிறுவனங்களுக்கு நேரடியாகவோ அல்லது மற்ற நிதியளிக்கும் நிறுவனங்களுடன் இணைந்தோ நேரடியாக கடன் வழங்குகிறது.
- மார்ச் 1982-ல் ஏற்றுமதி -இறக்குமதி வங்கி துவங்கப்படும் வரை ஏற்றுமதிக்கான நிதி உதவியையும் இவ்வங்கி வழங்கி வந்தது குறிப்பிடத் தகுந்ததாகும்.

1. **மாநில நிதிக்கழகங்கள் State Financial Corporation (SFCs)**

- 1951ஆம் ஆண்டு இந்திய அரசால் இயற்றப்பட்ட மாநில தொழில் நிதிக் கழக சட்டத்தின்படி பல்வேறு மாநிலங்களில் மாநில தொழில் நிதிக் கழகங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

2. **மாநில தொழில் மேம்பாட்டு கழகங்கள் State Industrial sDevelopment Corporations (SIDCOs)**

- இக்கழகம் அந்தந்த மாநில அரசுகளுக்கே உரிமையானதாகும். இக்கழகங்கள் தொழிற் நிறுவனங்களை கடனை அளிப்பதோடு, மாநிலத்தில் தொழில் மயமாதலை தூண்டுவதும் ஆகும்.

**பணக்கொள்கையின் இரண்டு நிலைகள்**

**பணவீக்கம்**

**மலிவுப் பணக் கொள்கை**

1)கடன் பெறுதல் எளிது
2)நுகர்வோர் அதிகம் நுகர்வர்
3)வியாபாரம் விசாலமாகும்
4)அதிக மக்கள் வேலை பெறுவார்கள்
5)மக்கள் அதிகம் செலவு செய்வார்கள்

## மந்தநிலை

### அருமைப்பணக் கொள்கை

1) கடன் பெறுதல் கடினம்
2) நுகர்வோர் குறைவாக நுகர்வர்
3) வியாபார விரிவாக்கம் தள்ளிப்போகும்
4) வேலையின்மை அதிகரிக்கும்
5) உற்பத்தி குறையும்.

### மின்னணுவங்கி முறை (E-Banking)

- மின்னணு வங்கியானது நிகழ்நிலை வங்கி முறை (Online Banking) அல்லது இணைய வங்கி முறை (Internet Banking) என்றும் அழைக்கப்படுகிறது.
- இவ்வங்கி முறையில் மையப்படுத்தப்பட்ட வங்கிகளுக்குள் (core banking) இணைப்பினை ஏற்படுத்தி பரிவர்த்தனைகள் மற்றும் இதர வங்கி நடவடிக்கைகள் நடைபெறுகிறது.
- இன்றைய இந்த மெய்நிகர் வங்கி முறை (Virtual banking) வழக்கமான வங்கிமுறையுடன் ஒப்பிடும்பொழுது பரிவர்த்தனைகளுக்கான செலவையும் நேரத்தையும் பெருமளவுக்கு குறைக்கின்றது.

| நெ.ஃ.ப்ட் (NEFT) | ஆர்.டி.ஜி.எஸ் (RTGS) |
|---|---|
| தேசிய மின்னனு வழி பணப்பரிவர்த்தனை | நிகழ்நேர பெருந்திரள் தீர்வுகள் |
| தொகுப்பான பரிமாற்றம் செய்யப்படுகின்றது | நிகழ்நேரத்தில் பரிமாற்றம் எனவே விரைவாகச் செயல்படும் எனவே தாமதமாகும். |
| நேரம்: காலை 8 மணி முதல் 6.30 மணி வரை (மாலை 12.30 வரை மட்டும் சனிக்கிழமைகளில்) | நேரம் காலை 9 மணி முதல் 4.30 வரை (மாலை 1.30 வரை சனிக்கிழமைகளில்) |
| குறைந்தபட்ச அளவு கிடையாது | குறைந்தபட்ச அனுப்பும் தொகை ரூ.2 இலட்சம் |

### தானியங்கி பணம் வழங்கும் இயந்திரம்(Automated TellerMachine)

- தானியங்கி பணம் வழங்கும் இயந்திர முறை 1967-ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.

### பே.டி.எம் (Paytm)

- பே.டி.எம் என்பது இந்திய மின்னணு வர்த்தக பணம் வழங்கும் முறையாகும். பணம் வழங்கும் வங்கி என்பதன் விரிவாக்கம் தான் பே.டி.எம் எனப்படுகிறது.
- இது ஆகஸ்ட் 2015ல் இந்திய ரிசர்வ் வங்கியின் உரிமம் பெற்று ஆரம்பிக்கப்பட்டதாகும்.

- இவ்வங்கி விஜய் சர்மா கேல்கர் என்பவரின் 51 சதவிகித பங்குகள், ஒன் 97 கம்யூனிகேசன்ஸின் துணைநிறுவனத்தின் 10 சதவிகித பங்குகளை கொண்டு ஆரம்பிக்கப்பட்ட தனி நிறுவனம் ஆகும்.

**பற்று அட்டை (Debit Card) மற்றும் கடன் அட்டை (CreditCard)**

- பற்று அட்டை என்பது வாடிக்கையாளர் தனது வங்கிக் கணக்கிலிருக்கும் பணத்தை தானியங்கி இயந்திரத்தின் மூலம் பணம் எடுப்பது.

**செயல்படாத சொத்து (Non-Peforming Assets)**

- கடன் வாங்குபவர் தொடர்ந்து 90 நாட்களில் வட்டியோ அல்லது கடன் தொகையின் பகுதியையோ செலுத்தாமல் இருந்தால் அதை செயல்படாத சொத்து என்கிறோம்.

**வங்கிகள் இணைப்பு (Merger of Banks)**

- 2017 ஆம் ஆண்டு மைய அரசின் அமைச்சரவைக்குழு கூடி இந்திய ஸ்டேட் வங்கி குழுவின் ஐந்து இணை வங்கிகளை இணைப்பதற்கான முடிவை எடுத்தது.
- ஐந்து இணை வங்கிகளுடன் பாரதிய மகிளா வங்கியும் இணைக்கப்பட்டு பாரத ஸ்டேட் வங்கியாக ஏப்ரல் 1, 2017 முதல் செயல்படத் தொடங்கியது.

**பணமதிப்பு நீக்கம் (Demonetization)**

- பணமதிப்பு நீக்கம் என்பது அரசின் சட்டபூர்வ பணத்தொகுப்பிலிருந்து குறிப்பிட்ட அலகிலான பணத்தின் மதிப்பை செல்லாது என அறிவிக்கும் செயலாகும்.
- இந்தியாவில் 2016ஆம் ஆண்டு நவம்பர் 8 ஆம் நாள் இந்திய பிரதமர் நரேந்திர மோடி ரூ.500 மற்றும் ரூ.1000 மதிப்பிலான காகிதப்பணம் மதிப்பு நீக்கப்பட – அவ்வாறு மதிப்பு நீக்கப்பட்ட பணத்தின் மொத்த மதிப்பில் 99 சதவிகிதம் இந்திய ரிசர்வ் வங்கிக்கு திரும்பியது.

**பண மதிப்பிழப்பு மற்றும் பண மதிப்பு ஈடுசெய்தல்**

- இந்திய ரிசர்வ் வங்கியின் பரிந்துரையின் பேரில், நவம்பர் 8, 2016 ஆம் ஆண்டு இந்திய அரசு அ)கறுப்பு பணத்திற்கு எதிராகவும், ஆ)சுழற்சியில் உள்ள கள்ள ரூபாய் நோட்டுகளை வெளியேற்றவும், இ)பணம் சார்ந்த வியாபார முறையை ஒழுங்குபடுத்தவும், மற்றும் ஈ)பயங்கரவாதம் மற்றும் தீவிரவாதத்தின் நிதி வலிமையை அகற்றவும் பண மதிப்பிழப்பு நடவடிக்கையிலான மேற்கொண்டது. ரூ.500 மற்றும் ரூ.1000 நோட்டுகள் ரூ.17.118 பில்லியன் மதிப்பு ரூபாய் நோட்டுகள் பண மதிப்பிழப்பிற்கு முன்பாக நாட்டில் புழக்கத்தில் இருந்தன. அவைகள் 2,203 கோடி ரூபாய் நோட்டு காகிதங்களாக இருந்தன. இதில் 98.96% வங்கிகளுக்குத் திரும்ப அனுப்பப்பட்டது. பண மதிப்பிழப்பிற்கு ரூ.2000 மற்றும் ரூ.500 ரூபாய் புதிய நோட்டுகள் வெளியிட்டு நிலைமை சமப்படுத்தப்பட்டது.

**பண மதிப்பு நீக்கத்தின் நோக்கங்கள்**

1)கருப்புப் பணத்தினை ஒழிப்பது
2)இலஞ்சத்தை தடுப்பது
3)தீவிரவாதத்திற்கு பணம் செல்வதை தடுப்பது மற்றும்
4)கள்ளப் பணத்தினை தடுப்பது ஆகியன

**பண நீக்கம்**

- பண நீக்கம் என்பது ஒரு குறிப்பிட்ட பணத்தின் மதிப்பை நீக்குவதாகும்.
- முதன்முதலில் 1946 ஜனவரியில் ரூ.1000, ரூ.10,000 பணமதிப்புகள் நீக்கப்பட்டது.
- 1978 இந்திரா காந்தி ஆட்சியில் ரூ.1000, ரூ.5000, ரூ.10,000 பணமதிப்புகள் நீக்கப்பட்டது.
- நவம்பர் 8,2016 ரிசர்வ் வங்கி பழைய ரூ.500, ரூ.1000 மதிப்பு நோட்டுகளை நீக்கியது.

**நாணயம் மற்றும் அச்சு ஆலை**

| பதிப்பகம் | இடம் | தொடர்புடையது |
|---|---|---|
| இந்திய பத்திர அச்சகம் (1922) | நாசிக் | தபால் தலை, நீதித்துறை வில்லைகள், காசோலை மற்றும் பத்திரங்கள் அச்சிடப்படுகின்றன. |
| பத்திர அச்சு நிலையம் (Estd 1982) | ஹைதராபாத் | மத்திய ஆயத்தீர்வை கட்டணவில்லை |
| காகித நாணய அச்சகம் (1974) | நாசிக் | பத்து ரூபாய் தாள்களை பிரிவாக அச்சிடுகிறது. |
| வங்கி காகித நாணய அச்சகம் (1974) | திவாஸ் (ம.பி) | இது இரண்டு பிரிவுகளைக் கொண்டது. a)வங்கி நோட்டுகளான 20,50,100 ரூபாய் மற்றும் மேலுள்ள பிரிவுகள் b)பத்திர தாள்களுக்கு தேவையான மை ஆலை |
| புதிய காகித நாணய அச்சகம் (1995) | மைசூரு (கர்நாடகா) | சலபனி (மேற்கு வங்காளம்) |
| பத்திர காகித ஆலை | ஹோஸன்காபாத் | இவை காகித நாணயத்திற்குத் தேவையான மற்றும் பிற பத்திரங்களுக்கு தேவையான காகிதத்தை உற்பத்தி செய்கிறது. |
| அரசாங்க விருது மற்றும் நாணய ஆலை | கல்கத்தா மற்றும் நொய்டா | |

| முறை | காலம் | சதவீதம் | நிதி அமைச்சர் |
|---|---|---|---|
| 1வது | 1949 ஜீலை | 30.5 | டாக்டர்.ஜான் மாதாய் |
| 2வது | 1966 ஜீன் | 57.0 | டாக்டர்.சச்சீந்திரா சௌத்ரி |
| 3வது | 1991 ஜீலை 1 | 9 | டாக்டர்.மன்மோகன் சிங் |
| 4வது | 1991 ஜீலை 3 | 11.0 | டாக்டர்.மன்மோகன் சிங் |

| | |
|---|---|
| வங்கி வீதம் (அ) மறு கழிவு வீதம் (Bank Rate) | வணிக வங்கிகள் தங்களுக்குப் பணத் தேவை ஏற்படும் பொழுது பணத்திற்கு மைய வங்கியை நாடுகின்றன.<br><br>மைய வங்கி வணிக வங்கிகளிடமுள்ள ஏற்ற பத்திரங்களுக்குக் கழிவு செய்வதோ, அவற்றை ஈடாக வைத்துக் கொண்டு முன்பணமாகவோ தேவையான பணத்தை அளிக்கிறது. |
| ரொக்க கையிருப்பு விகிதம் (CRR) | மொத்த வைப்பீட்டுப் பணத்தில் ஒரு குறிப்பிட்ட சதவிகித்தை மைய வங்கியான ரிசர்வ் வங்கியிடம் வட்டி இல்லாமல் கொடுத்து வைப்பதைக் குறிக்கும். இது பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கை |
| சொந்த கையிருப்பு விகிதம் (SLR) | இது வணிக வங்கியின் மொத்த வைப்பீட்டில் ஒரு குறிப்பிட்ட விகிதம் அல்லது சதவீதத்தை தனது சொந்த கையிருப்பாக கையிருப்புப் பணம் போன்ற உடன் மாற்றத்தக்க வகையிலான முறையில் வைத்திருப்பதைக் குறிக்கும். |
| Repo Rate (Repurchasing Option Rate) | வணிக வங்கிகளுக்கு குறுகிய கால கடன் கொடுக்கும் பொழுது RBI பின்பற்றும் வட்டி விகிதம் Repo Rate ஆகும். |
| Reverse Repo Rate | வணிக வங்கிகள் தங்களிடமுள்ள அதிகப்படியான பணத்தை குறுகிய கால வைப்பாக RBIல் செலுத்தும் போது RBI ஆல் வழங்கப்படும் வட்டி விகிதம் ஆகும் |

**பிலிப்ஸ் விளைவு**

- ஒரு பொருளாதாரத்தில் வேலையின்மை மற்றும் பணவீக்கத்திற்கான உறவு பிலிப்ஸ் வளைவு காட்டுகிறது. பிரிட்டிஷ் பொருளாதார வல்லுநர் பிலிப்ஸின்

கண்டுபிடிப்பு என்பதிலிருந்தும், மேக்ரோ – பொருளாதார கொள்கைகளை ஆய்வு செய்வதற்கான ஒரு முக்கிய கருவியாக மாறியுள்ளது.

**பண அளிப்பு**

- ஒரு பொருளாதாரத்தில் உள்ள மொத்தப் பண அளவே பணஅளிப்பு ஆகும். ஒரு குறிப்பிட்ட நேரத்தில் நாட்டில் புழக்கத்தில் உள்ள பண அளவைக் குறிப்பதே பண அளிப்பாகும்.
- இந்தியாவில் காகிதப் பணங்கள் ரிசர்வ் பேங்க் ஆப் இந்தியாவாலும் நாணயங்கள் மத்திய அரசின் நிதித்துறையாலும் வெளியிடப்படுகின்றது.
- M1 = காகிதப்பணம், நாணயங்கள் மற்றும் கேட்பு வைப்புகள்
- M2 = M1 + அஞ்சலக சேமிப்பு வங்கியின் சேமிப்பு வைப்புகள்
- M3 = M2 + அனைத்து வணிக வங்கிகள் மற்றும் கூட்டுறவு வங்கிகளிலுள்ள கால வைப்புகள்
- M4 = M3 + அஞ்சலகத்திலுள்ள அனைத்து வைப்புகள்
- இதில் M1 மற்றும் M2 குறுகிய பணம் என்றழைக்கப்படுகிறது. மேலும் M3 மற்றும் M4 பரந்த நிலை பணம் என்றழைக்கப்படுகிறது.

**பண அளிப்பினை தீர்மானிக்கும் காரணிகள்**

1. **ரொக்கவைப்பு விகிதம் (Cash-Deposit –CDR)**

- இது பொது மக்கள் கையில் வைத்திருக்கும் பணம்/வங்கி வைப்புகளில் உள்ள பணம் என்ற விகிதத்தை குறிக்கும்

2. **ரொக்க இருப்பு வைப்பு விகிதம் (Reserve Deposti Ratio –RDR)**

- வங்கி தனது பாதுகாப்பு பெட்டகத்தில் வைத்திருக்கும் இருப்பு மற்றும் மைய வங்கியில் வைத்திருக்கும் ரொக்க வைப்பு/மொத்த வைப்புகள் என்ற விகிதம்

3. **ரொக்க இருப்பு விகிதம் (Cash Reserve Ratio – CRR)**

- வங்கியில் வைப்புகளில் குறைந்தபட்சமாக மைய வங்கியில் வைக்க வேண்டிய அளவு/வங்கிகளில் செலுத்தப்பட்ட மொத்த வைப்புக்கள் என்ற விகிதம்

4. **சட்டபூர்வ நீர்மை விகிதம் (Statutory Liquidity – SLR)**

- வணிக வங்கிகள் வைத்திருக்கும் நீர்மை தன்மையிலான சொத்துக்கள்/வணிக வங்கிகளில் இருக்கும் மொத்த கேட்பு மற்றும கால வைப்புகள் என்ற விகிதம்.

## ஏ.டி.எம்-ன் வகைகள்

| | |
|---|---|
| வெண்மை நிற குறியீட்டு ஏ.டி.எம் | NBFC வழங்கிய ஏ.டி.எம் (வங்கி அல்லாத நிதி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டது. |
| பழுப்பு நிற குறியீட்டு ஏ.டி.எம் | வங்கிகள் ஏ.டி.எம் மையங்களை தானே நிறுவி பராமரிப்பதற்கு பதிலாக அதை நிறுவி பராமரிக்கும் பொறுப்பை மூன்றாம் நபரிடம் ஒப்படைக்கப்படும். வாடிக்கையாளருக்கான பணம் மட்டுமே வங்கி வழங்கி வரும் |
| பச்சை நிற குறியீட்டு ஏ.டி.எம் | விவசாய பரிவர்த்தனைக்கு வழங்கப்பட்ட ஏ.டி.எம் |
| ஆரஞ்சு நிற குறியீட்டு ஏ.டி.எம் | பங்கு பரிவர்த்தனைக்கு வழங்கப்பட்ட ஏ.டி.எம் |
| மஞ்சள் நிற குறியீட்டு ஏ.டி.எம் | மின் வணிகத்திற்கு வழங்கப்பட்ட ஏ.டி.எம் |
| பிங்க் நிற குறியீட்டு ஏ.டி.எம் | பெண்களுக்கு வழங்கப்பட்ட ஏ.டி.எம் |
| பிரவுன் நிற குறியீட்டு ஏ.டி.எம் | ஏடிஎம் இயந்திரத்தின் வன்பொருள் மற்றும் குத்தகை நிறுவனம் ஒரு சேவை வழங்குநரால் சொந்தமானது, ஆனால் பண மேலாண்மை மற்றும் வங்கி நெட்வொர்க்குகள் இணைப்பு ஆகியவை ஸ்பான்சர் வங்கியால் வழங்கப்படுகின்றன |

**வங்கிகள் இணைக்கப்படுதல்**

- 10 பொதுத்துறை வங்கிகள் ஒன்றிணைக்கப்பட்டு 4 நிறுவனங்களாக உருவாக்கப்பட்டது
- ஒருங்கிணைக்கப்பட்ட வங்கிகள்

1. **பஞ்சாப் தேசிய வங்கி** + ஓரியண்டல் வணிகவியல் வங்கி + யுனைடென் பாங்க் ஆ.்.ப் இந்தியா (2 வது பெரிய பொதுத்துறை வங்கி)
2. **கனரா வங்கி** + சிண்டிகேட் வங்கி (4 வது பெரிய பொதுத்துறை வங்கி)
3. **யுனைடெட் பாங்க் ஆ.்.ப் இந்தியா**+ ஆந்திரா வங்கி + கார்பரேசன் வங்கி (5 வது பெரிய பொதுத்துறை வங்கி)
4. **இந்தியன் வங்கி**+ அலகாபாத் வங்கி (7 வது பெரிய பொதுத்துறை வங்கி)

## மாதிரி வினாத்தாள்

1. கூற்று 1: NBFI என்பது ஒரு நிதி நிறுவனம் ஆகும்.

   கூற்று 2: இது ஒரு முழு வங்கிக்கான உரிமம் கொண்டது. மேலும் மைய வங்கியால் கண்காணிக்கப்படுகிறது.

   A. 1, 2 சரி   B. 1 சரி   C. 2 சரி   D. எதுவுமில்லை   E. விடை தெரியவில்லை

2. வறுமை ஒழிப்புத் திட்டங்களை அவை தொடங்கப்பட்ட ஆண்டுடன் பொருத்துக:

   a. TRYSEM - 1. 2009

   b. NREP - 2. 1979

   c. JRY - 3. 1980

   d. RAY - 4. 1989

   A. 2 3 4 1   B. 3 4 2 1   C. 1 3 2 4   D. 4 2 1 3

   E. விடை தெரியவில்லை

3. பின்வரும் நிதி ஆணையங்களில் மத்திய அரசின் அனைத்து வரிகளின் நிகர வருமானத்தினை மாநிலங்களுக்கு அதிகார பகிர்வு வழங்க பரிந்துரை செய்த ஆணையம் எது?

   A. 8 வது நிதி ஆணையம்   B. 11 வது நிதி ஆணையம்   C. 10 வது நிதி ஆணையம்

   D. 9 வது நிதி ஆணையம்   E. விடை தெரியவில்லை

4. கிராமப்புற இளைஞர்களின் வேலைவாய்ப்புக்கான திறமை பயிற்சி அளிப்பது எந்த திட்டம்?

   A. பிரதான் மந்திரி ஆவாஸ் போஜனா - கிராமின்

   B. பிரதான் மந்திரி யுவா உதயமி விகாஸ் அபியான்

   C. தின் தயாள் உபாத்யாய கிராமின் கௌஷல்யா யோஜனா

   D. தின் தயாள் யுவா விகாஸ் அபியான்

   E. விடை தெரியவில்லை

5. கூற்று : பணவீக்கத்தை கட்டுப்படுத்த மைய வங்கியானது ரெப்போ விகிதத்தை அதிகரிக்கிறது.

காரணம் : ரெப்போ விகிதம் அதிகரிப்பால் கடன் வாங்குவதற்கான செலவு அதிகம். மேலும் கடன் வாங்குவதலைக் குறைக்கிறது.

A. கூற்று (ம) காரணம் சரி மேலும் கூற்றிற்கான காரணம் சரியான விளக்கமாகும்.

B. கூற்று சரி காரணம் தவறு

C. கூற்று தவறு காரணம் சரி

D. கூற்று (ம) காரணம் சரி ஆனால் கூற்றிற்கான காரணம் சரியான விளக்கமல்ல

E. விடை தெரியவில்லை

6. தவறாகப் பொருந்தியுள்ள இணையை கண்டறிக:

A. விவசாய மறுகடன் மேம்பாட்டுக்கழகம் (ARDC) - 1963

B. வட்டார ஊரக வங்கி (RRB) - 1976

C. நபார்டு (NABARD) - 1982

D. இந்திய தொழில் நிதிக்கழகம் - 1948

E. விடை தெரியவில்லை

7. கீழ்க்காணும் கூற்றுகளில் சரியானவற்றை கண்டறிக:

1. மாநில தொழில் நிதிக் கழக சட்டம் 1951 ன் படி பல்வேறு மாநிலங்களில் தொழில் நிதிக் கழகங்கள் ஆரம்பிக்கப்பட்டன.
2. சிறு மற்றும் நடுத்தர தொழில் மேம்பாட்டினை ஏற்படுத்துவது இக்கழகங்களின் நோக்கமாகும்.
3. இவை தங்கள் மாநில எல்லைகளைத் தாண்டியும் தொழில் நிதி உதவிகளை செய்கின்றன.

A. 1 & 2 B. 1 மட்டும் C. 1 & 4 D. 1, 2, 3 E. விடை தெரியவில்லை

8. பொருளாதார பின்னிறக்க காலத்தில் ஏற்படும் வேலைவாய்ப்பின்மைக்கு எதிராக எடுக்கப்படுவது.

1. விரிவாக்க பணக்கொள்கை 2. சுருக்கப் பணக்கொள்கை

3. மலிவு பணக்கொள்கை 4. அருமைப் பணக்கொள்கை

A. 2 & 3 B. 1 & 4 C. 1 & 3 D. 2 & 4 E. விடை தெரியவில்லை

9. சமீபத்தில் நடைபெற்ற வங்கி இணைப்பு இணைகளில் சரியானது:

1. பஞ்சாப் நேஷனல் பேங்க் - ஓரியன்டல் பேங்க் ஆ.ஃப் காமர்ஸ் (ம) யுனைடெட் பேங்க் ஆ.ஃப் இந்தியா

2. இந்தியன் பேங்க் - அலகாபாத் பேங்க்

3. கனரா பேங்க் - சிண்டிகேட் பேங்க்

4. யூனியன் பேங்க் ஆ.ஃப் இந்தியா - ஆந்திரா பேங்க் (ம) கார்ப்பரேஷன் பேங்க்

A. 1, 2, 3  B. 2, 3  C. 1, 4  D. 1, 2, 3, 4  E. விடை தெரியவில்லை

10. பின்வருவனவற்றை வரிசைப்படுத்துக:

1. பெரும் பிரிவினை ஆண்டு  2. மக்கள் தொகை வெடிப்பு ஆண்டு

3. சிறு பிளவு ஆண்டு  4. மக்கட்தொகை மாறுதல்

A. 2 1 4 1  B. 1 3 2 4  C. 1 2 3 4  D. 4 2 1 3

E. விடை தெரியவில்லை

Answer Key

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| B | A | B | C | A | B | D | C | D | B |